விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 18 சனிக்கிழமை (04.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 289

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஆணைக்குழுவின் அமர்வுகளில் புலனாய்வாளர்கள் பிரசன்னம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவலை

(கொழும்பு)

**பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற காணாமல்போனோர் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வில் இலங்கை படைத்தரப்பு புலனாய்வாளர்களின் பிரசன்னம் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவலை வெளியிட்டுள்ளது.**

[illegible] து தொடர்பில் மாற்றுக் கொள் கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், அண்மையில் முடிவடைந்த காணாமற்போனோர் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயற்பாடுகள் குறித்தும் ஆழ்ந்த கவலை வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட்டதற்கு ஏற்ப அது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்கும் திறனுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.

முழங்காவில் மற்றும் பூநகரியில் இடம்பெற்ற விசாரணைகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கண்காணித்ததில், மொழி பெயர்ப்பு குறித்து பல கேள்விகள் எழுந்துள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றுபவர்களை பாதுகாக்க நம்பகத்தன்மை மிகுந்த சாட்சி மற்றும் 20ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவாவில் அடுத்த வாரம் இலங்கை நிலைமை ஆய்வு

(கொழும்பு)

இலங்கையின் மனிதவுரிமைகள் நிலைமை குறித்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் ஆராயப்படவுள்ளது.

சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான பட்டயத்தில் கையெழுத்திட்ட நாடு என்ற முறையில் சர்வதேச சுயாதீனமான 18 நிபுணர்களைக் கொண்ட குழுவின் ஆய்வுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை இலங்கையும் உளாக வேண்டும்.

சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான பட்டயத்தில் கைச்சாத்திட்ட 168 நாடுகளுள் இலங்கையும் ஒன்று. இந்த அடிப்படையிலேயே இலங்கையின் மனதவுரிமைகள் நிலைமை குறித்து ஐந்தாவது தடவையாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் ஆராயப்படவுள்ளது.

இந்தப் பட்டயக் கடப்பாட்டின் அடிப்படையில் மனிதவுரிமைகளை நிலை நிறுத்துகின்றமை தொடர்பான தனது 20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு- கிழக்கு மீள் இணைப்பே இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு

07ஆம் பக்கம் பார்க்க...

## பிரி.உயர்ஸ்தானிகர் விவகாரம் விசாரணைக்கு மகிந்த பணிப்பு



(கொழும்பு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கலாநிதி கிறிஸ் நோனிஸ் மீது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தாக்குதல் சம்பவம் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கு எதிராக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சேனுக செனவிரத்னவினால் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு ஆகியன தொடர்பில் விசாரணைகளை 20ஆம் பக்கம் பார்க்க....

## மின்தாக்கி இளைஞன் பலி

(ஊரெழு)

மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி இளைஞன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள வர்தகர் ஒருவரின் வீடொன்றில் நேற்றிரவு 7:00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த ஜனார்த்தன் அச்சுதன் (வயது 21) என்ற உயர்தரம் கற்று வரும் இளைஞனே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப இளைஞன் வீட்டில் தனித்திருந்த நிலையில் மோட்டார் நீர்ப்பம்பி அறையினுள் மின்சார தாக்குதலுக்குள்ளாகி உடல் கருகி உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (கெ78)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

## இந்திய உயர்மட்டக் குழு விரைவில் இலங்கைக்கு

(சென்னை)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றமை தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வகாணும் நடவடிக்கையாக இந்திய அரசு உயர்மட்டக்குழு ஒன்றை விரைவில் இலங்கைக்கு அனுப்பவிருக்கிறது என செய்திகள வெளியாகியிருக்கின்றன.

எனினும் அக்குழுவின் விஜயத்திற்கான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இரு நாட்டு மீனவர் சர்ச்சை விவ 20ஆம் பக்கம் பார்க்க....

## பாப்பரசர் - மகிந்த சந்திப்பு



(ரோம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாப்பரசர் பிரான்சிஸை வத்திக்கானில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் பற்றி பாப்பரசரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்துரையாடியதாக வத்திக்கானின் அதிகாரபூர்வ வானொலிச் சேவை கூறியுள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் பற்றியும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. 20ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை–இந்திய கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை அடுத்த வருடத்தில் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

தலைமன்னாருக்கும் இராமேஸ வரத்துக்கும் இடையில் இந்த சேவை நடத்தப்படவுள் 20ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயா வாழ்வு திரைப்படமாகிறது



(சென்னை)

சமீபத்தில் ஜெயலலிதா கைது சம்பவம் தமிழ்நாட்டையே அதிர்ச்சிக் குள்ளாக்கியது 20ஆம் பக்கம் பார்க்க....

## பௌர்ணமியன்று சிவப்பு நிலவு

(கொழும்பு)

எதிர்வரும் 8-ம் திகதி பௌர்ணமி தினத்தன்று பூரண சந்திர கிரகணம் நிலவுவதால் சிவந்த நிறத்திலான நிலவை காணக்கூடியதாக இருக்கும் என்று வானவியல் நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இருப்பினும், இந்த சந்திர கிரகணத்தை இலங்கையில் முழுமையாக காணக் கிடைக்காது என்றும் சந்திர கிரகணத் 20ஆம் பக்கம் பார்க்க....

## கச்சதீவை மீளப் பெற வேண்டும்



(சென்னை)

கச்சதீவை மீள பெற வேண்டும் என்று தமிழகத்தின் புதிய முதலமைச்சர் ஓ.பன் 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செல்வி கேதீசன் கலையரசி

செல்வி கேதீசன் கலையரசி
கிளி/ செல்வாநகர் அ.த.க பாடசாலையில்
கல்வி கற்று 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5
புலமைப்பரீட்சையில் தோற்றி 165 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரை வாழ்த்துவதோடு
அவரை இந்நிலைக்கு ஆளாக்கிய பாடசாலை அதிபர்
திரு.சி.கேதீஸ்வரன், வகுப்பாசிரியர் திருமதி யோ.ஜெயக்குமார்,
ஏனைய ஆசிரியர்கள், பின்னூட்டல் கல்வியை வழங்கிய
திருமதி அ.வ.ஆனந்தராசா, தூயவன் கல்வி நிலைய
ஆசிரியர் திரு.சி.கனேஸ்வரன் ஆகியோரையும்
மனதார வாழ்த்துவதோடு அவர்களுக்கு மேது நன்றிகளையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்.
அப்பா, அம்மா, சகோதரர்கள், அப்பம்மா, தாத்தா,
அம்மம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தப்பாமார்.

(-8651)

## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

**1.ICT பட்டதாரிகள்**

**தகைமைகள்**

B.Sc பட்டதாரிகள் மற்றும் பட்டதாரி பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**2.நடன பட்டதாரிகள் (பெண்)**

**தகைமைகள்**

நடனத்தை பிரதான பாடமாக பயின்ற பட்டதாரிகள், பட்டம் பெற்றவர்கள் மற்றும் பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு:- பட்டதாரி அல்லாதோர் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

இல்லத்தில் தங்கியிருந்து கற்பிக்க வேண்டும். உணவு, தங்குமிடம் என்பன ஒழுங்கு செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:-13.10.2014**

**தொடர்புகளுக்கு:-தி.இராசநாயகம்**
**தலைவர், மகாதேவா ஆச்சிரமச்**
**சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

**தொலைபேசி இலக்கம்:-0770604950, 0214923118**

(சி-8645)

## போட்டிப் பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்குகள்

★ நடைபெறவுள்ள கணக்காய்வாளர், கணக்காளர் பரீட்சைக்கு
சனி(இன்று), ஞாயிறு, திங்கள், புதன்காலை 9.00-4.00வரை

★ SLASமட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஒவ்வொரு ஞாயிறும் 9.00 - 4.00 வரை

★ அபிவிருத்தி உத்தியோகத்தர்- வினைத்திறன்காண் தடைப்பரீட்சை
ஒவ்வொரு ஞாயிறும் 9.00 மணி

★ முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு I ஒவ்வொரு ஞாயிறும் 1.30 P.M
பிரிவு II ஒவ்வொரு புதன் 3.00 P.M

**T.P.No.: 0754164564**

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகாமை)

## வீடு புகுந்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் பகுதியில் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கந்தர்மடம் மணற்தரை வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் அதிகாலை வீட்டின் யன்னல் கம்பிகளை வளைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தவர்களால் மடிக்கணினி ஒன்று, 5 மோதிரம், 2 சோடி தோடு, ஒரு கைத்தொலைபேசி உட்பட பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து மோப்ப நாய்களுடன் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (செ)

## நெரிசலில் சிக்கி 32 பேர் பலி

பீஹாரில் ஏற்பட்ட சனநெரிசல் சம்பவம் ஒன்றில் குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

இறந்தவர்களில் பலர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என பீஹாரின் தலைநகர் பாட்ணாவிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்துப் பண்டிகையான தசரா தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்து பெரிய விழா ஒன்றில் கலந்து கொள்ள பொதுமக்கள் திரண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடந்தது.

இந்த விழா நடந்த பகுதியிலிருந்து கூட்டத்தினர் கலை ந்து செல்ல முயன்று கொண்டிருந்த போது இந்த நெரிசல் ஏற்பட்டது என குறிப்பிடப்படுகிறது. (செ-11)

## துளிர்கள் நிறுவனத்தின்

★இலவச உள ஆற்றுப்படுத்தல் COUNSELING கற்கைநெறி

★சமூக சேவையில் ஆர்வமுள்ள இருபாலாரும் 15.10.2014 முன் தங்கள் சுயவிபரங்களை தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

**30, கம்பஸ் லேன்,**
**திருநெல்வேலி.**

(7937)

**பணிப்பாளர்**
**துளிர்கள்**

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.08.2013 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் -14.10.2014 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | .................. |
| நெல்லியடி | .................. |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்.**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-8649)

## ஆசிரியர் தின அன்பளிப்பு பொருட்கள் மிகக் குறைந்த விலையில்

### TCT மல்ரி ரேட் சென்ரரில்....

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு உங்கள் ஆசான்களுக்கு வழங்கக் கூடிய அன்பளிப்பு பொருட்கள் கவர்ச்சிகரமான வடிவங்களில், பல தெரிவுகளில்.



**TCT புடவையகத்தில் உங்கள் ஆசான்களுக்கு வழங்கக் கூடிய புடைவை வகைகள் விருப்பத் தெரிவுக்கேற்ப எம்மிடம் உள்ளது.**



ஆசிரியர் தின அன்பளிப்பு பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட விலைக் கழிவு வழங்கப்படும்.

**அறப் பணியே முதற்பணி**

(சி-8650)

ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்

**இல.527, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
**0217451895, 0777511285**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
## FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

### Changes in Examination Time Table

**Third Examination in Business Administration First Semester-2013 (New & Old Syllabus)**

The following changes have been made in the Third year first semester examination timetable for the academic year 2012/2013 for the course units of **BAD BE 3101 & BAD ESL III-Business English,** which was earlier scheduled on 06.10.2014. All the other examinations will be held as per the schedule.

| Date | Course Unit | Subject | Venue | Time |
|---|---|---|---|---|
| Third Examination in Business Administration First Semester-2013 (New & Old Syllabus) | | | | |
| 09.10.2014 Thursday | BAD BE 3101 / BAD ESL III | Business English | New Commerce Hall | 01.00pm-04.00pm |

For more details visit to the Faculty web site:http://www.ifn.ac.lk/maco/

Registrar
University of Jaffna.
03.10.2014

(C-8648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதரவு திரட்டும் ஆளும்தரப்பு

# மூன்றாவது முறையாகவும் மகிந்த ஜனாதிபதி வேட்பாளராக களத்தில்!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் பதவி வகிக்க முடியும் என்பதனை தெளி வுபடுத்த நாடு முழுவதிலும் ஆளும் கட்சி கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட் டுள்ளது. இவ்வாறான ஓர் நிலை மையில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ மூன்றாவது முறையாகவும் போட்டியிடுவது சட்டவிரோதமா னது என முன்னாள் பிரதம நீதிய ரசர் சரத் என் சில்வா, ஜே.வி.பி கட்சி உள்ளிட்ட தரப்பினர் வாதிட்டு வருகின்றனர்.

எனினும் மூன்றாவது முறை யாகவும் ஜனாதிபதி பதவி வகிப்பதில் சிக்கல் கிடையாது என ஆளும் கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியி டுவதில் சிக்கல் கிடையாது என்ப தனை தெளிவு படுத்தும் வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் பிரசா ரம் செய்யப்படவுள்ளது.

இலங்கை சுதந்திரக் கட்சியி னால் இந்த விசேட கருத்தரங்குகள் நாடு முழுவதிலும் முன்னெடுக்க ப்படவுள்ளன.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிர்க்க ட்சிகள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 30.05.1983 மறைவு 04.09.2014

**சுந்தரலிங்கம் பிரபாகரன் (பிரபா)**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.10.2014) சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கீரிமலை புனிதக் கரையில் நடைபெற்று 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் அமரத்துவ செய்தி அறிந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் பல அச்சு பிரதி கொடுத்த வர்களுக்கும் மற்றும் பல உதவிகளை புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (7949) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வன் பாலகிருஷ்ணன் கஜானன்**



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்த மானிப்பாய் மகளீர் கல்லூரி மாணவன் செல்வன் பாலகிருஷ்ணன் கஜானன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பல சாதனைகளைப் படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

சாந்தை, பண்டத்தரிப்பு

வாழ்த்துவோர்: ஆறுமுகம் குடும்பம்.

(7948)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி இராஜசேகர் விதுஷா**



கிளி/ முழங்காவில் ஆரம்பப் பாடசாலை மாணவி இராஜசேகர் விதுஷா அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 மதிப்பெண்களைப் பெற்று விசேட சித்தி பெற்றமையைப் பாராட்டுவதுடன் அவர் முழங்காவில் அருள்மிகு ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் அனுக்கிரகத்தால் மென்மே லும் உயர்வுகளைப் பெற ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

இவருடன் புலமைப்பரீட்சையில் விசேட சித்தி பெற்ற சற்குணராஜா சுவேத்தா அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அதிபர், ஆசிரியர்கள், அப்பா, அம்மா, சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், முழங்காவில்

(7952)


## இராசி பலன்

4.10.2014
(புரட்டாதி 18, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.58 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு- 2.02 மணிவரை
திருவோணம் பிற்பகல் -4.28 மணிவரை
இராகுகாலம் -9.02-10.32 மணிவரை
சுபநேரம் -3.02-4.32 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், இனிமையான நாள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள், மாமன், மைத்துனர் வழியில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும், வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசிச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணமொன்றை மேற்கொள்வீர்கள், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** உறவினர் நலன்கருதிய செலவுகள் ஏற்படலாம், சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும்.

**மீனம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், பயணங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியர் இராசையாவின் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் கருத்துரையில் பத்தாவது நிகழ்வாக "சுய உரு: அடையாளத்தின் சுமை" (Self-portait: The Burden of Identity) என்னும் தலைப்பில் ஓவியர் ஆசை இராசையாவினால் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

இக் கருத்துரை நாற்பது வருட படைப் பாக்க அனுபவத்தை பகிரும் ஒன்றாக அமையும்.

ஓவியர் ஆசை இராசையா சிரேஷ்ட ஓவியரும் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையின் வருகைதரு விரிவுரையாளரும் ஆவார்.

மேற்படி நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நல்லூர் கோவில் விதியிலுள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. (இ







## பதிவு நடவடிக்கை இடம்பெறவுள்ளது

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 11 ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றவுள்ள அனைத்து மாணவர்களும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான காலப் பகுதியில் (பொதுவிடுமுறை தவிர்ந்த நாட்களில்) தங்களுடைய விபரம் தொடர்பான பதிவு நடவடிக்கைகள் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளதனால் நிர்வாகப் பகுதியுடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறும் வருகை தரும் பொழுது பட்டமளிப்பு விழா அழைப்பிதழை கொண்டு வருமாறும் நிறுவன பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது

## அச்சுவேலி வடக்கு விவசாயிகள் கவலை

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு வயல் வெளிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் தமது பயிர்கள் சேதமாக்கப்படுவதாகவும் தமக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி விடுகின்றன எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாடுகளை வளர்ப்போர் தமது மாடுகளை கட்டி வளர்க்காமல் வயல் வெளிகளில் மேய்வதற்கு விட்டுள்ளனர்.

இதனால் கரட், வெங்காயம், பயற்றங்காய், பீற்றூட் போன்ற விவசாயச்செய்கை சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பயிர்கள் விற்பனைக்கு உதவாது சேதமாக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மாடுகளின் உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் உரிமையாளர்கள் கவ னத்தில் கொள்ளாது தமது மாடுகளை மீண்டும் வயல்வெளிகளில் விட்டுள்ளனர்.

அத்துடன் விவசாய சம்மேளனப் பிரிவிற்கு விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டபோதும்இதுவரைஎந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறவில்லை.

விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தினமும் இவ்வாறான பிரச்சினை இருப்பதால் விவசாயிகள் பகல், இரவு என இரு வேளைகள் பாராது வயல் வெளிகளில் காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-22)

## இன்றும் நாளையும் சமுகமளிக்கவும்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகும் இணைந்து நடத்தி வருகின்ற சிங்கள பயிற்சி வகுப்புக்கள் இந்த வருடமும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் சிங்கள மொழி மட்டம் I இற்கான வகுப்பு இந்த வருடம் கடந்த ஆனி மாதம் தொடக்கம் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

எனினும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் தீர்மானித்துள்ள வகுப்பு நடத்துவதற்கான ஆக குறைந்த பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை 30 இற்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

எனவே வழங்கப்பட்டு வருகின்ற வகுப்பை இடைநிறுத்தாது தொடர்ந்து நடத்த புதிதாக இவ் வகுப்பில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களை இன்றும் நாளையும் நேரில் சமுகமளிக்குமாறும் ஏற்கனவே இந்த வகுப்பிற்கு சமுகமளித்து வந்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் பணிப்பாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.(இ

## சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதி இல.08 இல் மந்துவில் கிழக்கு கொடிகாமம் எனும் முகவரியை சேர்ந்த 65 வயதுடைய பாலன் முருகன் என்பவர் கடந்த மாதம் 24 ஆம் திகதி காலை 11.49 மணியளவில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் 25 ஆம் திகதி காலை 8.45 மணியளவில் சிகிச்சை பலனளிக்காதநிலையில்உயிரிழந்துள்ளார்.

இவரது சடலத்தை யாரும் உரிமை கோராமையால்வைத்தியசாலைபிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே இவரது சடலத்தை உறவினர் வந்து அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாண வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் டாக்டர் பி.பசுபதிராஜா அறிவித்துள்ளார். (இ

## விவசாய சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்.ஆவரங்கால் மேற்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விவசாய சம்மேளனத்தின் உபதலைவர் வெ.அமிர்தலிங்கம் தலைமையில் ஆவரங்கால்விவேகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஆவரங்கால் மேற்கு கிராம உத்தியோகத்தரும் கலந்து கொள்ள இருப்பதால் ஆவரங்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-134)

# சிரேஷ்ட பிரஜைகள் கழகம் வைபவ ரீதியாக ஆரம்பிப்பு





சிரேஷ்ட பிரஜைகள் கழகம் வைபவ ரீதியாக நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மல்லாகத்திலுள்ள சிறிபாஸ்கரன் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிரேஷ்ட பிரஜைகள் கழகத்தில் (தெல்லிப்பழை) 120 சிரேஷ்ட பிரஜைகள் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரஜைகளின் அறிவு, அனுபவம் என்பனவற்றினை எமது இளைய சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதே இக் கழகத்தின் பிரதான நோக்கமாகும். அத்துடன் தலயாத்திரை மேற்கொள்ளல், அடிப்படை கணனி அறிவை பெற்றுக் கொள்ளல் என்பனவும் இக்கழகத்தினூடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு அமைவாக உள்ளக விளையாட்டு உபகரணங்கள், கரம், சதுரங்கம் என்பன ஆளுநரினால் வழங்கப்பட்டன.

சிரேஷ்ட பிரஜைகள் சகல விடயங்களிலும் முன்னுரிமை பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அடையாள அட்டைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இலவச சிறப்பு மருத்துவ முகா ம்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

பிரம்மகுமாரிகள் நிலைய சகோதரர் பவன், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி ஜாக்ரத சைதன்யா, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி.விஜயலட்சுமி ரமேஸ், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.ஸ்ரீமோகன், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி (திருமதி) எஸ்.ஆர்.யூட் மற்றும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர். (இ

## அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கிழக்கு பிரதேச சபை யின் நீர்வேலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம் பெறுகிறது.

அந்தவகையில் நீர்வேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவிற்கான (J/269) கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி காமாட்சியம்மன் சனசமூக நிலையத்திலும் நீர்வேலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவிற்கான (J/270) கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி பொன்.செல்வமகால் மண்டபத்திலும் நடைபெறும் என நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி தி.தவராஜா அறிவித்துள்ளார். (இ

## ஆய்வு மாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரைகள்

(யாழ்ப்பாணம்)

மூன்றாவது பழந்தமிழர் ஆய்வு மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப் பழந்தமிழர் ஆய்வு மாநாட்டில் பழந்தமிழர் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை ம.வித்தியானந்தேசன் (மாவட்ட புள்ளிவிபரவியலாளர்) நிறுவுநர், பழந்தமிழர் இயக்கம், இலக்கம் 07, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பணம் என்ற முகவரிக்கு அல்லது mvithiyananthanesan@gmail.com எனும்ஈமெயில்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்கள் அறிந்துகொள்ள 0777 64 2379 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பழந்தமிழர் இயக்க நிறுவுநர் ம.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தை ஒடுக்கி ஆட்சி செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது

## விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

சட்டத்தை ஒடுக்கி ஆட்சி செய்ய அரசாங்கம் முயச்சிக்கின்றது எனவும் மொனறாகலை பாணியில் அரசாங்கம் எதிர் வரும் தேர்தல்களை வெற்றியீட்ட முயற்சிப்பதாக வும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். இயலுமான வரையில் இழி செயல்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டே சிரமப்பட்டு ஊவா மாகா ணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி யீட்டியது.

ஊவாவில் பின்பற்றிய வழிமுறைகளை எதிர்வரும் தேர்தல்களில் பின்பற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது. டிபெண்டர் வாகனங்களின் மூலம் வெளியாட்களை பிரசாரத்திற்கு கள மிறக்கி, தேவையற்ற அதிகாரிகளை இடமாற்றம் செய்து, தேவையான அதிகாரிகளை கடமைக்கு அமர்த்தி, பிரதேசசபை உறுப்பினர்கள் முதல் அமைச்சர்கள் வரையில் அனைவரையும் ஈடுபடுத்திய அரசாங்கம் ஊவாவில் பிரசாரம் செய்தது.

ஊவா தேர்தல் எவ்வாறு வெற்றி கொள் ளப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. ஊவாவில் இன்னமும் தேர்தல் வன்முறைகள் முடிவுக்குக்கொண்டு வரப்ப டவில்லை. பௌத்த சிங்கள மக்களும் வாழும் பகுதிகளில் மொனறாகலை பாணியிலும், தமிழ் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் பதுளை பாணியிலும் தேர்தல்களில் வெற்றியீட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

18ஆம் திருத்தச் சட்டத்தின் அமைவாக ஜனாதிபதி மகிந்த மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியாது என தெரிவிக்கப்படுகிறது. எனினும் உச்ச நீதிமன்றம் முடியும் என சொல்லக்கூடும சட்டத்தை ஒடுக்கி ஆட்சி செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஹிட்லரும் இதேவிதமான ஓர் ஆட்சிமுறைமையே பின்ப ற்றினார் என விக்ரமபாகு கருணாரட்ன சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் வழங் கியுள்ளார். (இ)

# பிக்குமார் மீது சாணம் வீச்சு

ஹோமாகம, பிட்டிபனவில் அமை ந்துள்ள பாலி மற்றும் பௌத்த பல்கலை க்கழகத்தைச் சேர்ந்த பிக்கு மாணவர்கள் சிலர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல், சுமார் 40 நிமிட நேர ஆர் ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

விடுதி வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, பிட்டிபன சந்தியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின் போது நேற்று முன்தினம் இனந் தெரி யாதோர் சிலரால் சாணம் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பிக்கு மாணவர்கள் தெரிவித்தனர். (இ)


நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்களுக்கு எங்களிடமிருந்து பல வேலைவாய்ப் புக்களை பெற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு (விசேடம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு) அநுராதபுரம், கதுறுவெல, குருநாகல், நிட்டம்புவ, பஸ்யாலை, மீரிகம, ஜாஎல, அலுத்கம, நாரம்பிட்டிய, பாணந் துறை, அவிசாவளை, ஹங்வெல, நுகேகொட, பியகம போன்ற பல பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ சொக்லெட்/ கண்ணாடி/ கிளவுஸ்/ கூரை/ சிம்/ தேங்காய்பால்மா/ டயர்/ ஆடை/ PVC/ பானம்/ பிஸ்கட்/ ஐஸ்கிறீம்/ பெயின்ட் போன்ற பல தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி லேபல்/ பொதி யிடல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000-35000. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில். சிங்களம், கல்வி அவசியம் இல்லை. நண்பர் கள் குழுக்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவர்.

077-6838231-வடமாகாணம்
யாழ்ப்பாணம்-0779141804
மட்டக்களப்பு-0770699492
முல்லைத்தீவு- 0774567082 (சி-8632)


# இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க திட்டம்

(கொழும்பு)

இந்தியாவும் அமெரிக்காவும், இலங்கை அரசாங்கத்தின் சில பங்காளிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சதித்திட்டத்தை முன்னெடுத்து வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித் துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் நூற் றுக்கு 51 வீத வாக்குகள் கிடைப்பதை தடுக்க கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக வசந்த பண்டார மேலும் தெரி விக்கையில், இலங்கையிலுள்ள சிறு சிறு கட்சிகளை தமது பக்கம் இழுத்து க்கொ ண்டுள்ளதோடு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸையும் பயன்படுத்தி அத்தோடு அரசி லுள்ள சில அதிகாரப் பரவலாக்கலை ஆதரிப் போரையும் இந்தியாவையும் அமெரிக்கா வையும் இணைத்துக்கொண்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை தோல் வியடையச் செய்து அரசை கவிழ்க்க சதித் திட்டம் தீட்டுகின்றது.

இதன் ஒரு கட்டம்தான் கூட்டமை ப்புக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே நடக்கப்போகும் பேச்சுவார்த்தையாகும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இந்த இரண்டு தமிழ், முஸ்லிம் இனவாதக் கூட்டு இன அடிப்படையில் வாக்குகளை சிதற செய்து மகிந்தவுக்கு நூற்றுக்கு 51 வீத வாக்குகளை கிடைக்காமல் செய்து பேரம் பேசும் பலத்தை தமது கையிலெடுத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கும்.

இதன்போது சிறு சிறு கட்சிகளும் அர சிலுள்ள அதிகாரப் பரவலாக்கலை ஆத ரிக்கும் குழுவினரும் இதே நிலைப்பாட்டை எடுக்கும்.

அதேவேளை 3 ஆவது தடவையாக ஜனா திபதிக்கு போட்டியிட முடியாது என்ற ஒரு கருத்தை எதிர்க்கட்சியினர் இப போதிருந்தே ஏற்படுத்தி வருகின்றனர்.

இதன்மூலம் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வென்றால் அவ்வெற்றி திருட்டு த்தனமாக பெறப்பட்டது என பிரசாரம் செய்வதற்கும் பயன்படுத்தவுள்ளது எனத் தெரிவித்தார். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 13 செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC/ பொறி யியலாளர்<br>தொ.இ: B/3691 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 79 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/3682 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம் செவ் இல<br>கி.பா: 16<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/ தபாலதிபர்<br>தொ.இ: B/3693 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 44 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3688 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 43 சூரி,செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L (கனடா)<br>தொ.இ: B/3695 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 93 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.COM<br>தொ.இ: G/3689 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 21 சூரி,செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: முகாமையாளர்<br>தொ.இ: G/3697 | பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 35 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: HNDA/ கணக் காளர்<br>தொ.இ: G/3694 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# தமிழ் மக்களினது ஆதரவு சந்திரிக்காவிற்கு நிச்சயம்

நாட்டில் உள்ள தமிழ் மக்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு பொட்டு வைத்து அழகு பார்த்தனர். இந் நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா பொது வேட்பாளராக களம் இறங்குவாரானால் தமிழர்கள் உள்ளிட்ட நாட்டு மக்களின் பெரும்பாலானோரின் ஆதரவு அவருக்கு கிடைக்கும் என்று அகில இலங்கை தேசிய தொழிலாளர் முன் னணியின் தலைவர் ஐயாசாமி இராம லிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

ஊவா மாகாண தேர்தல் கட்சிகளி டையே பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. இத்தேர்தல் முடிவினை மையமாக வைத்து கட்சிகள் எதிர்கால தேர்தல் குறித்த காய் நகர்த்தல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தன. ஊவா மாகாண தேர்தல் நிறைவு பெற்றுள்ள இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் குறித்த சிந்தனைகள் நாட்டு மக்களிடையேயும் கட்சிகளிடையேயும் வலுப்பெற்றுக் காணப் படுகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தேர்தலில் போட்டியிட முடியுமா? முடி யாதா? என்ற வாதப்பிரதி வாதங்கள் மேலெழுந்து வருகின்ற நிலையில் எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளர் மற்றும் தமது கட்சியின் சார்பில் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்து சிந்தித்து வருகின்றன.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பெயரும் பொது வேட்பாளர் தொடர்பில் அடிபடுகின்றது. சந்திரிகாவின் கடந்த கால ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் பல்வேறு உரிமைகளையும் பெற்று தலை நிமிர்ந்து வாழும் நிலைமை ஏற்பட்டது. தோட்டப்புறங்களின் அபிவிருத்தி கருதி சந்திரிகா அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். எனவே, மலையக மக்கள் உட்பட பெரும் பாலான நாட்டு மக்களின் இதயங்களிலும் அவர் இடம்பிடித்திருந்தார்.

இதனிடையே சந்திரிகா பொது வேட் பாளராக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நியமிக்கப்பட்டு வெற்றி பெறுமிடத்து மீண்டும் தமிழர்களின் வாழ்வு செழிப்படையும். புரையோடிப்போய் இருக்கின்ற நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமாக அரசியல் தீர்வொன்று ஏற்படும். நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாகும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர் தலில் சந்திரிக்கா பொது வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடி விவாதத்துக்கு வருமாறு ஞானசார தேரருக்கு அழைப்பு

முஸ்லிம்களுக்கு எதிராக பொது பலசேனா முன்னெடுத்துவரும் பொய் பிரசாரங்கள் குறித்து நேரடி விவாதத்துக்கு வருமாறு அவ்வமைப்பின் செயலாளர் கலகொட் அத்தே ஞானசார தேரருக்கு மேல் மாகாண சபை உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளருமான முஜிபுர் ரஹ்மான் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து மேற்படி அமைப்பின் செயலாளருக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

பொதுபல சேனாவின் சங்க சம்மேளன மாநாடு கொழும்பில் அணமையில் நடைபெற்றது. இதன் போது ஞானசார தேரர் முஸ்லி மக்களுக்கு எதிரான பல்வேறு பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரையாற்றினார்.

அவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானதாகும். முஸ்லிம், சிங்கள மக்கள் நீண்டகாலமாகவே இந்நாட்டில் மிகவும் நெருக்கமான உறவை பேணி வந்துள்ளனர். இந்நிலையில் முஸ்லிம்களால் பெரும்பான்மையினமான சிங்கள மக்களுக்கு பல இடையூறுகள் விளைவிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளமை முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

ஞானசார தேரரினதும் பொது பலசேனாவின் செயற்பாடுகளுமே முஸ்லிம், சிங்கள இன உறவில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயங்கள் குறித்து நேரடி தொலைக்காட்சி விவாதத்துக்கு அழைக்கிறேன்.

இதேவேளை முஸ்லிம் தலைமைகள் பொதுபலசேனாவுடன் நேரடி விவாதத்துக்கு முன்வராது பின்னிற்கிறது என அவ்வமைப்பின் செயலாளர் பல தடவைகள் குற்றம் சுமத்தியிருந்த நிலையில் முஜிபுர் ரஹ்மான் ஞானசார தேரரை விவாதத்துக்கு அழைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# 20% பால்மா மாதிரிகளில் டீசிடீ

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இம்மாதம் வரையில் ஆயிரத்து 190 பால்மா மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் இவற்றில் 20 சதவீதமான பால்மா மாதிரிகளில் டீசிடீ எனப்படும் இரசாயன நச்சுப்பொருட்கள் கலந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டில் 84 ஆயிரம் மெற்றிக் தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ள போதிலும் 2014 இல் 6 ஆயிரம் மெற்றிக் தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கமைய, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால்மாக்களும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தினால் டீ.சி.டீ பரிசோதனை செய்யப்படுகினறன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 100 |
| தக்காளி | 60 | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 50 |
| கோவா | 100 | 70 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 60 | 120 |
| பூசணி | 20 | 30 | 20 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 90 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 70 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 60 |
| பாகற்காய் | 160 | 130 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 180 | 80 | 70 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 80 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 80 | 160 |
| போஞ்சி | 160 | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 140 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 120 |

# இளைஞர் பாராளுமன்றத்தினது 11வது அமர்வு இடம்பெறவுள்ளது

இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் 11 ஆவது அமர்வு இடம்பெறவுள்ளது.

இவ் அமர்வானது இம் மாதம் 10 , 11 ஆம் திகதிகளில் மகரகம ஸ்ரீலங்கா யூத் வளாகத்தில் அமைந்துள்ள இளைஞர் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் அமர்வில் சிறுவர் தினத்தை அடிப்படையாக கொண்டு "பெண் பிள்ளையின் தனித்துவம் மற்றும் அவர்களது சவால்" உள்ளிட்ட விடயங்களில் விவாதம் இடம்பெறவுள்ளது.

சிறுவர்களின் தனித்துவம் மற்றும அவர்களது சவால்களைப் பெறறுக் கொள்வதற்கு பொருளாதாரம் சமூகம் மற்றும் சட்ட ரீதியான ஒதுக்குகள் போதுமானது என்பது சம்பந்தமாக விவாதிக்கப்படவுள்ளது.

இவ் அமர்வின் முதல் நாளில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ விருந்தினராக கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் அமர்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கர லியத்த, இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்டவர்கள் கலந்து கொள்வார்கள்.

இவ் அமர்வுகளில் அனைத்து உறுப்பினர்களையுடம் தவறாது கலந்து கொள்ளுமாறும் இதற்கான ஏறபாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அபி விருத்தி பணிப்பாளர் சனத் வீரசூரிய கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (இ-23)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 155

மீனா அம்பிகாபதி



கிறிஸ் கோகுல்




மதீசன் கணேஷ்




ரத்தினசபாபதி பாலராஜா




மயூரதன் மயூரன்




விமலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு மீள் இணைப்பே இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு

**வடக்கு கிழக்கின் மீளிணைப்பு எனும் தலைப்பில் சண்டே லீடரில்நிர்மலா கன்னங்கரா எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.**

**பலமிழக்க வைக்கப்படும் தமிழர் வாழ்வுரிமையும் அரசியல் இருப்பும்**

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வொன்றினை பேச்சுவார்த்தையூடாக பெற்றுக்கொள்ளும் விதத்தில் உயிர்த்துடிப்புடன் கூடிய ஒரே அரசியல் நிர்வாக அலகு முறையாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளவும் இணைக்கப் பட்டாலன்றி மேற்படி படைத்தரப்பு அக்கிரமங்கள் ஓயாதென்பதுடன் நில ஆக்கிரமிப்பும் தொடரும் அதே நேரம் எமது இவ்விரு மாகாணங் களிலும் சிங்களக் குடியேற்றங்க ளும் விரைவாக இடம்பெற்றுக் கொண்டு தானிருக்கும். இவைகள னைத்தும் தமிழ்மக்களது வாழ்வுரிமையையும் அரசியல் இருப்பை யும் பலமிழக்கவைத்து பாழடிக்கும் நோக்குடன் கூடியவையாகும்.

வடக்கையும் கிழக்கையும் ஒரே அரசியல் நிர்வாக அலகாக இயங்கவைப்பதற்கான தொடர் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட விருப்பதாகவும் இரு மாகாணங்களுக்குமான அதிகாரப் பரவலாக்கத்தின் பொருட்டு முடிந்தவரையிலான முயற்சிகளிலும் இறங்கவிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

வடக்கில் சிவில் நிர்வாகத்தை விரைவிலேயே நிலைநிறுத்துவது தான் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் விருப்பமென்பதுடன் படைமுகாம்களை அப்புறப்படுத்துவது இடம்பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றத்தினை பூர்த்தி செய்வது மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிப்பது போன்ற அவசர நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு ஆர்வத்துடன் காத்திருப்பதாகக் கூறினார்.

வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கியதன்மூலம் எமது குடிமக்களது வாழிட உரிமையை படையினர் சூறையாடிக் கொண்டுள்ளனர். இரு மாகாணங்களையும்பிரிப்பது என்றசர்ச்சைக்குரிய நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்தே இந்த நிலப்பறிப்பு பிரச்சினையே பெரும்எடுப்பில் ஆரம்பித்ததென்பதுடன் இந்த நிலைமை போருக்குப் பின்னர் மேலும் பாரிய சீரழிப்பு வேலைகளுக்கே தொடர்ந்தும் காரணமாயிருந்து கொண்டிருக்கிறது. தெற்கிலிருக்கும் சிங்களவர்களை எமது நிலங்களில் குடியேற்றுவதன்மூலம் அரசாங்கம் வேண்டுமென்றே எமது வடக்கு கிழக்கு பிரதேச குடியியற்பரம்பல் நிலைமைகளை மாற்றியமைத்து வருகிறது. முறிகண்டியிலுள்ள தமிழர்களின் புராதன நிலங்களை அபகரித்துக் கொண்ட படைத்தரப்பு சீன உதவியுடன் கூடிய வீட்டுத்திட்டத்தினூடாக தனித்தனியான10ஆயிரம்வீடுகளை இராணுவ வீரர்களின் சொந்தப் பாவனைக்குஎனஅங்குகட்டிக்கொள்வதற்கு பயன்படுத்துகிறது என பிரேமச்சந்திரன்சுட்டிக்காட்டியுள்ளார்.

1987 இல் கையெழுத்திடப்பட்ட இந்திய- இலங்கை உடன்படிக்கையின் படி வடக்கையும் கிழக்கையும் மீள் இணைக்கும் கடப்பாட்டிற்குட்பட்டிருக்கும் இலங்கையரசு அவற்றை இடையீட்டு நீதிமன்ற நடவடிக்கை மூலம் பிரித்திருப்பது அரசியல் காரணங்களுக்காகவேயன்றி வேறில்லை என்பதே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பேச்சாளரது கூற்றாகும்.

> “சுயநிர்ணய உரிமையு டன் கூடியதும் ஒரே அரசியல் நிர்வாக அலகாக சேர்ந்தே இயங்குவதுமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள் இணைப்பு மட்டுமேதமிழர் பிரச்சினைக்கான ஒரே தீர்வாகும் என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனின் கூற்றாகும்.
>
> வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள் இணைப்பு ஆரம்பத்திலிருந்தே எமது தொடர்ச்சியான கோரிக்கையாக இருந்து வருவதுடன் வடக்கு மாகாணத்தின் அநேகமான தமிழர் நிலங்கள் இணைந்த அம்மாகாணங்களின் பிரிப்புக்குப்பின்னரே படைத்தரப்பினரால் மக்களிடமிருந்து பிடுங்கிக் கொள் ளப்பட்டன என்று பிரேமச்சந்திரன் கூறுகிறார்.
>
> போரின்போது பாதுகாப்பு நோக்கங்களுக்காக பறித்தெடுக்கப்பட்ட தமிழ்மக்களது காணிகள் போரின் பின்னரும்கூட அவற்றின் உரிமையாளர்களிடம் திரும்பக் கொடுக்கப்படவில்லை. அவற்றை உரிமையாளர்களிடமே திரும்பவும் கொடுக்கும்படி உரிமை கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தபோது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு அவ்விடங்கள் சுத்தப்படுத்தப்பட்டமை உறுதியானதும் அவை மீளவும் மக்களிடம் ஒப்படைக்கப்படும் என எமக்கு பதிலளிக்கப்பட்டது. ஆனால் அநேகமான அப்பிரதேசப்பகுதிகள் கண்ணிவெடிகள் அகற்றி சுத்தப்படுத்தப் பட்டுவிட்டதாக அரசு தொடர்ந்து கூறிவருகின்ற போதிலும் அவை இதுவரை திரும்பவும் கிடைக்கவில்லை என பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டுகிறார்.
>
> நாட்டில் சமாதானம் நிலவுவதாக அறிக்கைகள் மூலம் பிரகடனப்படுத்தும் அரசு வடக்கில் பாதுகாப்பு வலயங்களை தொடர்ந் தும் பேணிக்கொள்வதற்கு எவ்விதம் அனுமதிக்கலாம்? என சுரேஷ் கேள்வியெழுப்புகிறார்.
>
> யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் ஆயிரக்கணக்கில் விஸ்தீரணம் கொண்ட தனியார் காணிகள் அபிவிருத்தி என்ற போர்வையில் படைத்தரப்பினரால் தற்போது பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுக் கூறுகிறார்.”



இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் இருமாகாணங்களும் இணைத்துக்கொள்ளப்பட்ட அதேநேரம் அவ்விணைப்பினை நிரந்தரமானதாக ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான மக்கள் கருத்துக் கணிப்பொன் றினை ஒரு வருடத்திற்குப்பின்னர் மேற்கொள்வதென்ற ஏற்பாடொன்று மிருக்கிறது. ஜனாதிபதிகளாயிருந்த் ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்றோரது நிர்வாகத்தின் கீழ் எதுவிதக் கருத்துக் கணிப்புமே மேற்கொள்ளப்பட வில்லை என்பதுடன் தற்போதைய ஆட்சியின் கீழ் இரு மாகாணங்க ளும் நிர்ப்பந்தமான முறையில் பிரிக்கவும்பட்டன என அவர் விளக் கினார்.

முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்காகிலும் இரு மாகாணங்களையும்மீள் இணைத்துக் கொள்ளவேண்டுமென்ற உரிமைக் கோரிக்கையெதனையும்எழுப்பாததற்காக இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை குற்றஞ்சாட்டிய பிரேமச்சந்திரன் முஸ்லிம் தலைவர்களை தத்தமது சொந்த தனிப்பட்ட திட்டங்களின்படி செயற்படுவதை விடுத்து தமது சொந்த சமூகத்தின் நலன்களுக்காக செயற்பட்டிருக்க வேண்டுமென மேலும் கூறினார்.

சிறுபான்மை முஸ்லிம்கள் மாகாணங்களை மீளிணைப்பதற்கு விரும்பிய போதிலும் அவர்களது உரிமைக் கோரல் அவர்களது தலைவர்களாலேயே மழுங்கடிக்கப்பட்டு மௌனிக்கப்பட்டதாயிற்று என பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டுகிறார்.

கடுமையான கஷ்டங்களுக்கு உட்பட்டவர்களாயிருந்த முஸ்லிம் மக்கள் போரின்போது மிகுந்த கஷ்டங்களுக்கு முஸ்லிம்கள் உள்ளா கியிருந்தவர்கள் என்பதால் அவ்வித மானதொரு இணைப்பு வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பது அவர்களைப் பொறுத்தவிடயமென அரசியல் பகுப்பாய்வாளர் அகிலன் கதிர்காமர் கூறுகிறார்.

அரசியல் ரீதியாக வடக்கும் கிழக்கும் இணைவதா அல்லது கிழக்கு தொடர்ந்தும் தனியொரு மாகாணமாக செயற்படுவதா என்பதற்கான தமது விருப்பத்தை முஸ்லிம்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டும் என்பதே கதிர்காமரது கூற்றாகும்.

வடக்கு மாகாணத்திற்கான பிரிப்பு இடம்பெற்று பிரதேசப் பகுதிகளிரண்டும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாகி அவற்றுக்கான தமிழ் குடியேற்ற செயற்பாடுகள் படைத்தரப்பினர் கைகளில் விடப்பட்டதானது தமிழ்மக்களின் இயல்பான குடிப்பரம்பல் உரிமைகளை நிர்ப்பந்தமான முறையில் பலவீ னப்படுத்துவதற்கேயாகும்என அவர் மேலும் கூறுகிறார்.

1987ஆம் ஆண்டின் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின்கீழேயே இந்த இரண்டு மாகாணங்களும் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் அதுமட்டிலான சர்ச்சைக்குரிய நீதிமன்ற தீர்ப்பினையடுத்து அவையிரண்டும் பிரிக்கப்பட்டதன் பின்னரே தமிழர்கள் காணிப்பிரச்சினைகள் உட்பட மேலும் வேறு பல பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்கவேண்டிய நிலைமை உருவாகிற்று. படைத்தரப்பினர் தமிழர்களின் காணி களை எந்தவிதக் கட்டுப்பாடோ வரை யறையின்றியோ அபகரிக்கும் நட வடிக்கைகளும் பெருமெடுப்பில் இடம்பெற்றன.

இந்த அபகரிப்பு வேலைகளனைத்தும் பாதுகாப்பு வலயங்கள் அல்லது அவை சம்பந்தப்பட்ட தளங்கள், முகாம்கள் போன்றவற்றை நிர்மாணிப்பதென்ற போர்வையிலேயே இடம்பெற்றன.

ஆனாலும் உண்மையில் இக்காணிகள் அனைத்தும் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தனியார் தரப்புகளுக்கே வழங்கப்பட்டன என கதிர்காமர் குற்றம்சாட்டுகிறார்.

கதிர்காமரது கூற்றுப்படி குறிப்பிடத்தக்க தொகையிலான தமிழர் குடியேற்ற காணிகள் பலவற்றின் அபகரிப்பு இந்த மாகாண பிரிப்புக்குப் பின்னரே இடம்பெற்றதுடன் தமிழர்களை அவர்களது இயல்பு வாழ்க்கையின் சகல விடயங்களிலும் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக பின்னடைவுக்குள்ளாக்கியதாயுமிருந்தது.

அதிகாரப் பரவலாக்கம் என்பதற்கே இடமில்லாத நிர்ப்பந்த நிலையொன்றை ஏற்படுத்தியிருந்தது மட்டுமல்லாமல் தமிழ்மக்களனைவரையும் மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியதுமே இந்த மாகாணப் பிரிப்பின் விளைவாகியிருந்தது.

இராணுவம் யாழ்ப்பாணத்தின் வட பிரதேச காணிகளை மட்டுமல்லாது வவுனியாவிலுங்கூட காணிகளை அபகரித்திருந்தது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தெற்கிலுங்கூட நிலைமை இதுவேதான் என கதிர்காமரது குற்றச்சாட்டு மேலும் தொடர்கிறது.

அதேநேரம் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளராகிய நிசந்த ஸ்ரீவர்ணசிங்க, வடக்கும் கிழக்கும் மீளவும் இணைக்கப்பட வேண்டுமென்ற தமிழர்களது உரிமைக்கோரிக்கையானது வெறும் கனவு ஒன்றேதான் என கூறு கிறார்.

வடக்கு கிழக்கு பிரிப்பு மட்டில் துலாம்பரமான ஒரு மைல்கல் போன்ற விதமான உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் அந்த தீர்ப்பினை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணி அதிகாரத்தை நீக்கி அவ்வதிகாரத்தை மத்திய அரசிடமே பாரப்படுத்துவதாக நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட பிந்திய தீர்ப்பானது அரசின் கரங்களையே மேலும் பலப்படுத்துவதாக அமை கிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பரவலாக்கப்படுவதாக இருந்த போதிலும் அவை மாகாண நிர்வாகங்களுக்கு ஒருபோதுமே வழங்கப்பட்டதில்லை என வர்ணசிங்க கூறு கிறார்.

தமிழ்மக்களுக்கு சொந்தமான காணிகள் போலியான அபிவிருத்தி என்ற பெயரில் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுவதாக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை வர்ணசிங்க நிராகரித்திருந்தார். வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பரண்களை நிறுவி அங்கு பாதுகாப்பை நிலை நிறுத்தும் பொருட்டே காணிகள் கையேற் கப்படுவதாக அவர் உறுதியாக கூறுகிறார்.

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

942

## அப்பா ஏன் பொய் சொன்னார்!

...**மா**லை முழுவதும் வழக்கமான உற்சாகத்தை இழந்து எதிலும் நாட்டமில்லாமல் இருந்தான்.

அம்மாவிடம்கூட சொல்லாமல் அப்பாவிடம் மட்டும் வகுப்பாசிரியர் அவரைப் பள்ளிக்கு வரச்சொன்னதைச் சொல்லிவிட்டுப் பசியோடும் பயத்தோடும் இரவு படுத்துவிட்டான்.

விடிந்ததும் அப்பாவைத் தேடினான். அப்பா அவசரமாக விடியற்காலையிலேயே எழுந்து வேலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டிருந்தார்.

அப்பா எங்கேம்மா காணோம்?

கவலைப்படாதே நிச்சயமாக உங்கள் பள்ளிக்கு வருவதாகச் சொல்லிவிட்டு போயிருக்கிறார்!

அம்மா பதில் தந்தாள்.

இரண்டாவது பாடவேளை.

படபடப்போடு உட்கார்ந்திருந்தான் குமார்.

வகுப்பாசிரியர் அடுத்த வகுப்புக்குப் புறப்படப் போகும் நேரம், வகுப்புக்கு வெளியே வாசலில் வந்து நின்றார் குமாரின் அப்பா ராஜா.

ஹலோ... வாங்க சார்... உங்களைத்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆசிரியர் வரவேற்றார்.

சிரித்த முகத்தோடு உள்ளே நுழைந்த ராஜா, வணக்கம் சார், வரச்சொன்னீங்களாமே! என்ன விடயம்? குமார் ஏதாவது தவறு செய்துவிட்டானா?

நோ, நோ குமார் ரொம்ப நல்ல பிள்ளையாச்சே! ஒண்ணுமில்லே இந்த தடவை ரெண்டு பாடத்தில் பெயிலாகி இருக்கானே, அதப்பத்தி சொல்லத்தான். போன தடவை கணக்கில் தொண்ணூறு மார்க் எடுத்ததுக்கே நேரில் வந்து எங்கிட்டே பேசினீங்க. மார்க் ஏன் குறைந்துதுன்ற விபரமெல்லாம் கேட்டு அப்புறம்தான் ரேங்க் கார்டுல கையெழுத்துப்போட்டீங்க! இந்த மாதத் தேர்வுல கணக்கு, ஆங்கிலம் ரெண்டிலுமே பெயிலாகிட்டிருக்கான், நீங்க கையெழுத்துப்போட்டு அனுப்பியிருக்கீங்களே! அதைப் பார்த்ததும் எனக்கு சந்தேகம் வந்துட்டுது. அதனால்தான் வரச்சொல்லியிருந்தேன். இந்தாங்க, ரேங்க் கார்டு, மறுபடியும் பாருங்க. எவ்வளவு மோசமான மார்க் வாங்கியிருக்கான்.

ஆசிரியர் மூச்சுவிடாமல் பேசினார்.

ரேங்க் கார்டைக் கையில் வாங்கிப் பார்த்தார் ராஜா.



கணக்குப் பாடத்தில் முப்பது ஆங்கிலத்தில் முப்பத்து மூன்று! அதிர்ந்து போனார்.

அவர் அந்த ரேங்க் கார்டை அப்போதுதான் பார்த்தார்.

பெற்றோர் கையெப்பம் போட வேண்டிய இடத்தில் அவருடைய கையெப்பம் இருந்ததையும் கவனித்தார். அது அவர் போட்டதில்லை என்பதைத் தெரிந்துகொண்டார்.

ஒரு நொடிதான் சிந்தித்தார்.

தன் மகன் குமார் செய்துள்ள தவறைப் புரிந்துகொண்டார்.

குமாரைத் திரும்பிப் பார்த்தார்.

குமார் அமைதியாக எழுந்து நின்று தலையைக் குனிந்து கொண்டார். மற்ற மாணவர்கள் அங்கே என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சத்தோடு அமைதியாக இருந்தனர்.

போன மாதம் ரேங்க் காட்டில் திருட்டுக் கையெழுத்துப்போட்டது தெரிந்தவுடன் முகமது கவுஸ் என்ற மாணவனை எல்லோர் முன்னிலையிலும் வகுப்பிலேயே அவனுடைய அப்பா அடித்து நொறுக்கியது குமாருடைய கண் முன்னே நின்றது.

அப்பா என்ன செய்யப் போகிறாரோ என்று நினைத்துப் பயத்தோடு நின்றிருந்தான். அவருடைய கோபம் அவனுக்குத் தெரியும்.

ஆமாம் சார்! பார்த்தேன்! வீட்டில் விசேஷம் வந்துவிட்டதால் இரண்டு நாள் அவனுக்குப் படிப்பில் கவனம் செலுத்த முடியாத அளவு விருந்தினர் தொந்தரவு. அடுத்த முறை நிச்சயமாக நிறைய மதிப்பெண் எடுப்பான். இந்த முறை அவனை மன்னிச்சிடுங்க. நானும் கவனிக்கிறேன்!

ராஜா சாதாரணமாகச் சொன்னார். குமாரின் காதுகளை அவனால் நம்பமுடியவில்லை!

அவன் மார்க் குறைந்ததில் கூட எனக்குப் பெரிய வருத்தம் இல்லை சார். நீங்கள் மிகவும் கண்டிப்பானவராச்சே! ரேங்க் கார்டில கையெழுத்துப் போடமாட்டீங்களே! ஒருவேளை குமார் ஏதாவது திருட்டுத்தனமாக.... ஆசிரியர் முடிப்பதற்குள் ராஜா முந்திக்கொண்டார்.

(தொடரும்)

10.2014
04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 610 -ஹெராகிளியஸ் ஆபிரிக்காவில் இருந்து கொன்ஸ்டண்டீனப்போலை கப்பல் மூலம் அடைந்து பைசணடைன் பேரரசன் போக்காஸ் மன்னனை ஆட்சியில் இருந்து கவிழ்த்து பேரரசனானான்.
- 1209 -நான்காம் ஒட்டோ புனித ரோமப் பேரரசனானான்.
- 1537 -மத்தியூ பைபிள் எனப்படும் முதலாவது முழுமையான ஆங்கில விவிலிய நூல் அச்சிடப்பட்டது.
- 1582 -கிரெகொரியின் நாட்காட்டி பாப்பரசர் பதின் மூன்றாம் கிரெகொரியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அக்டோபர் 4 இற்குப் பின்னர் நேரடியாக அக்டோபர் 15 இற்கு நாட்காட்டி மாற்றப்பட்டது.
- 1777 - அமெரிக்கப் புரட்சி: பிலடெல்பியாவின் ஜேர்மண்டவுன் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஜோர்ஜ் வாஷிங்டனின் படைகளை சேர் வில்லியம் ரோவின பிரித்தானியப் படைகள் தோற்கடித்தன.
- 1824 - மெக்சிகோ குடியரசு ஆகியது.
- 1830 - பெல்ஜியம் நெதர்லாந்து நாட்டில் இருந்து பிரிந்து தனிநாடாகியது.
- 1853 - கிரிமியப் போர்: ஒட்டோமான் பேரரசு ரஷ்யா மீது போரை அறிவித்தது.
- 1883 - ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் கடுகதி தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1910 - போர்த்துக்கல் குடியரசு அறிவிக்கப்பட்டது. இரண்டாம் மனுவேல் மன்னன் ஐக்கிய இராச்சியத்துக்கு தப்பினான்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா சொலமன் தீவுகளைக் கைப்பற்றியது.
- 1957 - பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிககு நடைப்பயணம் நடத்தப்பட்டது.
- 1957 - முதலாவது செயற்கைச் செய்மதி ஸ்புட்னிக் 1 பூமியைச் சுற்றி வர விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1958 - பிரான்சின் ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1959 - லூனா 3 விண்ணுக்கு ஏவப்பட்டது. இது சந்திரனைச் சுற்றி வந்து அதன் தொலைவுப் படத்தை பூமிக்கு அனுப்பியது.
- 1965 - ஐக்கிய அமெரிக்காவுக்கு சென்ற முதலாவது பாப்பாண்டவர் பாப்பரசர் ஆறாம் போல் நியூயோர்க் வந்தடைந்தார்.
- 1992 - மொசாம்பிக்கின் 16 ஆண்டு கால உள்நாட்டுப் போரை முடிவுக்கு வந்தது.
- 1997 - ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றில் இரண்டாவது மிகப்பெரிய வங்கிக் கொள்ளை வட கரொலைனாவில் இடம்பெற்றது. 17.3 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இவற்றில் 95 விழுக்காடு பணம் திரும்பப் பெறப்பட்டது.

### பிறப்புகள்

- 1884 - சுப்பிரமணிய சிவா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1925)
- 1904 - திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (இ. 1932)
- 1936 - கிறிஸ்தோபர் அலெக்சாண்டர், கட்டடக் கலைஞர்
- 1988 - டெரிக் ரோஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1669 - ரெம்பிராண்ட், டச்சு ஓவியர் (பி. 1606)
- 1947 - மாக்ஸ் பிளாங்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1858)
- 2000 - மைக்கேல் ஸ்மித், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

### சுவாரஸ்ய சரியான போட்டி!



...சச்சினின் அதிரடி ஆட்டம் இந்தியாவின் வெற்றிக்கு வழிவகுக்க சச்சின் தான் சொன்னபடி கோக்ககோலா கோப்பையை தனது பிறந்த நாள் பரிசாக தாய்நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

சச்சினின் அபார ஆட்டத்தால் கவரப்பட்டவர் ஸ்டீவ்வா. சச்சின் ஒரு அற்புதமான கிரிக்கெட் வீரர். பிராட்மெனுக்கு அடுத்ததாக சச்சின் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை என்றார் அவர். சச்சின் அதிரடி ஆட்டத்தைக் கண்ட பிறகு எனக்கு வரும் கனவுகளில்கூட சச்சின் எனது பந்துகளை ஃபோர்களாகவும் சிக்ஸர்களாகவும் அடிப்பதுபோலவே இருக்கிறது என்று வார்னே புகழ்ந்தார்.

உலகின் மிகச் சிறந்த அணிகளும் ஒன்றான ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 10 ஆட்டங்களில் சச்சின் எடுத்தவை மொத்தம் 1,130 ரன்கள். சராசரி 113%. 1 டபுள் செஞ்சுரி, 5 செஞ்சுரிகள், 2 ஐம்பதுகள். சச்சினின் புகழ் இந்திய எல்லைகளைத் தாண்டி உலகமெங்கும் பரவத் தொடங்கியது. அனைத்து கிரிக்கெட் பத்திரிகைகளிலும் சச்சின் பற்றிய செய்திகள், புகைப்படங்கள், சச்சின் தனது பேட்டிங் மூலம் தனது விமர்சகர்களின் வாயை அடைத்து சொன்னதைச் செய்துகாட்டினார்.

> சச்சினின் அபாரா ஆட்டத்தால் கவரப்பட்டவர் ஸ்டீவ் வா. சச்சின் ஒரு அற்புதமான கிரிக்கெட் வீரர் பிராட்மெனுக்கு அடுத்ததாக சச்சின் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை என்றார்!



கென்யா, பங்களாதேஷ், இந்தியா கள் இந்தியா, இலங்கை நியூசிலாந்து நாடுகளுக்கு இடையே நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் சச்சின் எடுத்த ரன்கள் 65, 53,128. இந்தியா கோப்பையை வென்றது. மூன்று மாதங்களில் மூன்று செஞ்சுரிகள். மூன்று ஆட்ட நாயகன் விருது என சச்சின் தனது சாதனைகளின் அளவை விரிவுபடுத்திக்கொண்டேவிற்கு இடையே நடைபெற்ற முத்தரப்பு போட்டிகளில் இந்தியா இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுக் கோப்பையை வென்றது. சச்சின் 103 பந்துகளில் 100 ரன்கள் எடுத்தது. தனது பதினோராவது ஒருநாள் சதத்தை அடித்தார். இலங்கையில் மீண்டும் சிங்கர் அகாய் கோப்பைக்கான போட்டி போனார். சச்சின் ரன் குவிக்கும் இயந்திரமாகவே மாறிவிட்டார். 1998 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு மட்டுமன்றி சச்சினுக்கும் மிக மிக ராசியான ஆண்டாகத் திகழ்ந்தது. அந்தக் கால கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு நாள் போட்டிகள் கிடையாது. ஆனால், தற்போதைய வீரர்களுக்கு ஒருநாள் போட்டிகள் கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளன. வருடம் முழுவதும் இவர்களுக்குக் கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணைகள் நிரம்பி வழிகின்றன. சச்சின் பதினாறு வயதில் சர்வதேச கிரிக்கெட் ஆட வந்தார். இருபத்தி ஐந்து வயதிற்குள் மொத்தம் 62 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 200 ஒருநாள் போட்டிகள் சராசரி 54% இருபத்தி ஐந்து வயதில் டான் பிராட்மென், சோபர்ஸ், ரிச்சர்ட்ஸ் ஆகியோர் இவ்வளவு போட்டிகள் ஆடியிருக்கின்றனரா என்பது சந்தேகமே. கிரிக்கெட் உலகின் தலை மகனான டான்பிராட்மெனுக்கு இணையாக சச்சின் ஒப்பிடப்படுகிறார். இது சரியா தவறா என்பது ஒருபுறம் இருக்கட்டும். பொதுவாக ஒப்பீடுகள் சமகாலத்தில் இருப்பவர்களுடன் மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, இக்காலத்தவரை அக்காலத்தவருடன் ஒப்பிடுவதோ அல்லது என்ன இருந்தாலும் அவர்போல் வருமா என்று சொல்வதிலும் எந்த அர்த்தமும் இல்லை.

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கோப்பைக்கான ஆட்டங்களைக் கண்டு களித்த முக்கிய வி.வி.ஐ.பிக்களுள் பிராட்மெனும் ஒருவர்.

மும்பையில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான ஆட்டத்தில் சச்சின் விளாசிய 90 ரன்களால் கவர்ந்தவர்களுள் பிராட்மெனும் ஒருவர்.

(தொடரும்)

கே. ரமேஷ்

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

....உலகின் எந்த மூலையில் இருந்தாலும் தினமும் கணினியின் முன் அமர்ந்து அரட்டையடிக்கும் வாழ்நாள் நண்பனாக இருந்தாலும், அவர் சொல்லும் ஏதோ ஒன்று நமது அங்கீகாரத்திற்கு எதிராகச் செல்லுமானால், திடீரென்று அவர் அவ்வளவாக நெருக்கம்- இல்லாதவராக ஆகிவிடுகிறார். மீண்டும் அவரை முன்போல் பழைய நெருக்கமான நிலைக்கு எடுத்துச் செல்ல, உங்களுக்குச் சிறிது காலம் ஆகும். அந்தச் சமயத்தில் உங்கள் அன்பு எங்கே போயிற்று! அதற்கு சிறிது காலம் உடல் நலம் சரியில்லாமல் போயிற்று போலிருக்கிறது!

அது நீங்கள் விளையாடும் விளையாட்டுதான். அன்பும் வெறுப்பும் மாறி மாறி மேலே வரும். ஒன்றுக்கொன்று இடம்மாறிவரும் ஒரு விளையாட்டு தான். இந்த அன்பு-வெறுப்பு விளையாட்டு அன்பே அல்ல. தெளிவாக இருங்கள். அது ஒரு மனிதனுக்கோ அல்லது ஒரு சூழ்நிலைக்கோ உங்களுடைய வெறும் எதிர்ச்செயல், அவ்வளவுதான். இதைத்தான் நாம் அன்பு என்கிறோம். இது உண்மையான அன்பு அல்ல. கலப்பற்ற கற்பனையான அன்பு. அவ்வளவே.

உண்மையான அன்பு இலக்கற்றது. ஒரு இலக்கு இருந்தாலும் இல்லாவிடிலும் அது வெறுமனே இருக்கிறது. உண்மையான அன்பு தானாக இருக்கிறது. அது இலக்கு எதையும் அறியாது. இங்கு தான் என்பது நீங்கள் தான். நீங்களே அன்பாகி விடுகிறீர்கள். அவ்வவுதான். அதனுடன் தொடர்பு கொள்ளும் [illegible] உணர்கிறது. [illegible] பாக ஒரு நதி ஓடுகிறது. வெவ்வேறு இடங்களில் அதை எதிர்கொள்ளும் மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். அதே போல, உண்மையான அன்பு ஒரு மனிதனிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அவனைச் சுற்றியுள்ள [illegible] அதை உணர முடிகிறது. [illegible] உண்மையான அன்பில் நிபந்தனைகளுக்கு இடம் கிடையாது. உங்களுள் இருக்கும் சக்தி பொங்கிப் பிரவகித்துத் தன்னை அன்பாக வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உங்களால் சிக்கல் மிகுந்த உறவுகளின் எல்லைகளை உடைத்துக் கொண்டு, அழகாக அன்பான இருப்புத் தன்மையாக வெளிப்படுத்திக்கொள்ள முடியும்! புரிந்து கொண்டீர்களா? சரி...



ஆன்மீகம் 34

அன்பேயான, உங்கள் இருப்புத் தன்மையின் தன்மையைக் கண்டு பிடிக்க இரண்டு விடயங்கள் செய்யலாம். முதலாது: திரும்பத் திரும்ப இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்பதன் மூலம் அவை உங்களுக்குள், சொல்லப்படும் விடயத்தைப் பற்றிய, திடநம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவை உங்களுக்குள் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி உருமாற்றத்திற்கான செயன்முறையை துவக்குகிறது. இரண்டாவது: தியானம் செய்வதன் மூலம் உண்மையிலேயே உருமாற்றம் நிகழமுடியும். அனுபவபூர்வமான வாழ்வில், நீங்கள் உறவுகளில் மேலும் மேலும் ஆழமாகச் செல்லும்பொழுது நீங்கள் உணர்வதெல்லாம் உண்மையான அன்பல்ல;

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -21

## மண்புழு உர தேநீர்: சேதன விவசாயத்தினை முன்னெடுப்பதற்கு கைகொடுக்கும் தொழில்நுட்பம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

மண்புழுஉர தேநீர் என்பது நாம் வளர்க்கும் பயிர்களுக்காக விசேடமாக தயாரிக்கும் உயிர்த் திரவமாகும். இது மண்புழு திரவத்திலிருந்து வேறுபடுகின்றமையினாலும் இதற்கு தனித்துவமான இயல்புகள் இருக்கின்ற காரணத்தினாலும் இத்தொழில்நுட்பம் பற்றி விளக்க முனைந்துள்ளேன். சேதன விவசாயம் சாத்தியமானதா என பலரிடமும் பலமாதிரியான கேள்வி எழுகின்றமையை காணலாம். சேதன விவசாயத்தை முன்னெடுக்கும் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தால் இன்னும் எமது மக்களுக்கு அறிமுகப்படுத்தினால் இது சாத்தியமே என இங்கே பதிவு செய்ய விரும்புகின்றோம். ஆனால் இதற்கு பொறுமையும், தன்னம்பிக்கையும், ஆர்வமும் இன்னும் திடசங்கற்பமும் மிகமிக அவசியம். எமது பிரதேசத்தில் உருவாகும் சேதனப்பொருட்களை உலகச் சந்தைக்கு எடுத்து செல்வதற்கு வழிகள் பல விரைந்து வரும் இந்நேரத்தில் சேதனமுறையில் பயிர்களை வளர்ப்பதற்கு நாம் முன்னுரிமை கொடுப்பது அவசியமாகும். மேலும் அசேதன இரசாயனங்களால் எமது மண் மாசடைந்திருக்கும் இந்நிலையில் எமது பிரதேசத்திலுள்ள மண்ணை வளமுள்ளதாக்கவும் மாசடைவதை நிவர்த்திக்கவும் சேதன விவசாய முன்னெடுத்தல் அவசியமாகின்றது. இங்கே சேதன விவசாயத்தை செய்வதற்கு எம்மிடமுள்ள பாரம்பரிய முறைகள் தற்போது முழுமையாக கைகொடுக்காது. அதற்கு காரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. நாம் பயன்படுத்தும் பயிர்வகைகள் திருந்திய கலப்பினமாக இருக்கும் நிலையில் அவற்றுக்கு அசேதன உள்ளீடுகளின்றி எதிர்பார்த்த விளைச்சலை பெறடியாதென்பதனை கவனித்தல் அவசியம்.

இவ்வாறான சூழ்நிலையில் சேதன விவசாயத்தை முழுமையாக முன்னெடுப்பதற்கு உள்ள அனைத்து வழிவகைகளையும் நாம் கடைப்பிடித்தால் இன்னும் உலகெங்கும் சிறப்பாக முன்னெடுக்கப்படும் சேதன வழி பயிர்ச் செய்கையில் கடைப்பிடிக்கப்படும் நுணுக்கங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை எமது மக்களும் பயன்படுத்தினால் சேதன விவசாய பயிர்ச்செய்கை எங்கள் பிரதேசத்திலும் சாத்தியமாகும். இதனை சூழலுக்கிணைவான தொழில்நுட்பமாக இதில் தரப்பட்டுள்ளது. இதனை வீட்டிலோ, வயற் பரப்பிலோ செய்துகொள்ளலாம். மின்சாரத்தின் உதவி தேவைப்படுவதனால் மின்சாரம் உள்ள இடங்களில் செய்து பின்னர் அதனை எடுத்துச்சென்று விசிறலாம்.

தேநீர் என்பது தேயிலையை கரைத்தெடுப்பது என்பதற்கு மாறாக தேயிலையிலிருந்து வடித்தெடுப்பதுன்றது என்னும் உங்களது வினாவும் நியாயமானது தான். அதனை விளக்கவும் இங்கே முற்பட்டுள்ளேன். மண்புழுஉரதேநீர் மண்புழு உரத்திலிருந்து வடித்தெடுக்கப்பட்டது ஆகும். இதனை தெளிப்பானின் மூலமாக தயாரித்தவுடனேயே பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். மண்புழு உரதேநீரை வடிகட்டுவதற்கான பொறிமுறை தேவை. இந்த வடிகட்டல் ஏனைய முறையை விட சற்று வித்தியாசமானது. வடிகட்டுதலினை சிறிய அளவில் கூட இலகுவாக செய்யலாம்.



மண்புழு உரதேநீரை வடிகட்டும் முறை

இதற்கு தேவையான பொருட்களாக ஒரு பிளாஸ்ரிக் வாளி அல்லது பேசின் (ஏதாவதொரு கொள்கலனாகவும் இருக்கலாம்), பருத்தித்துணி அல்லது காரிக்கன் துணி, காற்றினை செலுத்துவதற்காக மீன் தொட்டிகளில் ஒட்சிசனை கொடுப்பதற்காக பயன்படுத்தப்படும் பம்பி அல்லது மோட்டர். அதனை இணைப்பதற்கான மெல்லிய தொடுப்பு குழாய்கள்.

**எப்படிச்செய்வது என யோசிக்கின்றீர்களா?**

பிளாஸ்ரிக் வாளியினுள் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீரை எடுத்தல் வேண்டும். அதனுள் 500 கிராம் மண்புழுஉரத்தை காரிக்கன் துணியினுள் இட்டு கட்டி பொட்டலமாக எடுத்தல் வேண்டும். இந்த பொட்டலத்தை தண்ணீரினுள் வளி புகுந்து மண்புழு உரத்திலுள்ள சத்துக்களைக் கரைத்து விடும். இவ்வாறு கரைந்த சத்துக்கள் நீரில் கரைந்திருக்கும். இவ்வாறு செய்வதனால் நீரின் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக மாறத்தொடங்கி இறுதியில் செம்மண்ணிறமானதாக மாறும். இது தேநீரின் நிறத்தில் இருப்பதனாலும் வெறுமனே கரைக்காது வடிகட்டி எடுப்பதனாலும் மண்புழு உரதேநீர் (Vermicompost Tea) என அழைக்கப்படுகின்றது. இங்கே நீர்மூலக்கூறுகள் வளியுடனான பிணைப்பை மேலதிகமாக பெறுவதனால் மண்புழு உரதேநீரின் மகத்துவம் அதிகமாக இருக்கும்.

மேற்படி வடிகட்டும் அலகை தேவைக்கேற்ப பெரிதாகவும் அமைத்துக்கொள்ளலாம். இதில் முக்கியமான பகுதியாக மீன் வளர்ப்பதற்கு பயன்படும் காற்றினை செலுத்தும் பம்பி மட்டுமே பெரிதாக தேவைப்படும். தேநீர் வடிகட்டும் தேவைக்கேற்ப பம்பியின் அளவை மாற்றிக் கொள்ளலாம். இம் மண்புழு உர தேநீரை இலைப்பகுதிக்கு தெளிப்பதனால் அதிகரித்த விளைச்சலைப் பெற முடிவதோடு பயிர்களை தாக்கும் நோய்களிலிருந்து விடுபடவும் வாய்ப்புண்டு. அனைத்து பயிர்களுக்கும் இந்த தேநீரை தெளிக்க முடியும். செய்து பாருங்கள். அதிலுள்ள பயனை கண்டறியுங்கள். உண்மையெனில் மற்றையவருக்கும் தெரிவியுங்கள்.

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XIII

முன்னிலைப்படுத்தியே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல் துறையில் மண்புழுஉர தேநீர் பற்றி ஆய்வு இறுதியாண்டு மாணவனால் செய்யப்பட்டது. ஆய்வின் முடிவுகள் விஞ்ஞான சஞ்சிகைகளில் மட்டும் பிரசுரிக்கப்படும் நிலையை மாற்றி எமது மக்களுக்கு முழுமையாக தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன் அதனை மக்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்ற எமது நோக்கத்திற்கிணைவாக இவ்வாரம் மேலதிக விளக்கங்களுடன் என பொருள்படலாம். சென்ற வார கட்டுரையை வாசித்த பலர் மண்புழுதிரவத்தைப்பற்றியும் மண்புழுஉர தேநீரைப்பற்றியும் மேலதிகமாக அறிய விரும்பிய காரணத்தினால் மண்புழுஉர தேநீர் பற்றி மேலதிக தகவல்கள் தொகுத்து தரப்பட்டுள்ளன. எமக்கு இந்த எளிய தொழில்நுட்பம் புதியது என்றாலும் மேலைத்தேயத்திற்கு இது பழையதுதான். இருப்பினும் தேநீரை இவ்வாறு வடித்தெடுப்பதன் மூலம் மண்புழு திரவத்தில் மேலதிகமாக என்ன ஆகப் போகி

மூழ்கும் படியாக வைத்து அதனை தொங்கவிடவேண்டும். பின்னர் மோட்டரின் வெளிப்பகுதியை குழாய்களுடன் இணைத்து அக்குழாய்களை வாளியிலுள்ள நீரினுள் அமிழுமாறு தொங்கவிட வேண்டும். இப்போது மோட்டருக்கான மின்சார இணைப்பை ஏற்படுத்தவும். காற்று குழாய்களினூடாக தள்ளப்படும் போது செலுத்தப்படும் வளி குமிழ்களாக வெளியேறும். இதில் ஏற்படும் இயக்கவிசை காரிக்கன் துணியிலுள்ள கூட்டுரத்தை மெல்லமெல்லமாக அசைத்து அத

## ஏ.ரி.எம். பண மோசடியில் ஈடுபட்ட நபருக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

போலியான ஏ.ரி.எம். அட்டைகளைப் பாவித்து மட்டக்களப்பிலுள்ள வங்கிகள் சிலவற்றில் பணம் பெற்ற ஒருவருக்கு கடூழியச்சிறையும் தண்டமும் விதித்து மட்டக்களப்பு மேல் நீதிம ன்றம் தீர்ப்பளித்தது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் கடந்த புதன்கிழமை இதற்கான தீர்ப்பினை வழங்கினார்.

மட்டக்களப்பு - திருமலை வீதியைச் சேர்ந்த யோகரத்தினம் யோகசுதர்சன் (வயது 29) என்பவர் மீது சட்டமா அதிபர் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கில் எதிரியான மேற்படி நபர் குற்றங்களை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து 'தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த எதிரியான யோகரத்தினம் யோகசுதர்சன் ஐக்கிய இராச்சிய வங்கிகளின் போலியாகத் தயாரிக்கப்பட்ட ஏ.ரி.எம். அட்டைகளைப் பாவித்து மட்டக்களப்பு அரசடி மக்கள் வங்கி உட்பட சில வங்கிகளில் எட்டு இலட்சம் ரூபாவுக்கு மேல் மோசடியாகப் பணம் பெற்றிருந்தாரென சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

இந்த மோசடி தொடர்பில் எதிரி மீது 15 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் இதில் 14 வழக்குகளில் தலா மூன்று குற்றச்சாட்டுக்கள் வீதமும் மற்றைய ஒரு வழக்கில் ஒன்பது குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருந்தன.

எனினும் இரு வருடங்களுக்கு மேல் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்காது தலைமறைவாகியிருந்த எதிரி பின்னர் புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பில் கைது செய்யப்பட்டதுடன் நீண்ட காலமாக விளக்கமறியலிலும் இருந்து வந்தார்.

இவர் மீதான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரி குற்றங்களை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச்சிறை தண்டனையும் 15 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

இதேவேளை தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் 15 வழக்குகள் தொடர்பிலுமான 51 குற்றச்சாட்டுக்களின் பேரிலும் தலா ஒரு மாதம் வீதம் கடூழியச்சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (இ)

## முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்துவிட்டது

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர், விசா தொடர்பாக தாக்கல் செய்த மேன்முறையீட்டை அமெரிக்க நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபரான பிரேமதாச உடுகம பொல, அமெரிக்காவில் விசா வழங்குமாறு கோரி தாக்கல் செய்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

மூன்று தடவைகள் விண்ணப்பித்திருந்ததாகவும் அவை அனைத்தையும் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து விசா வழங்குமாறு கோரி மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அமெரிக்க நீதிமன்றம், விசா வழங்குவதற்கு முடியாது என அறிவித்துள்ளது.

உடுகம்பொல மீது 1980களில் ஜே.வி.பி கிளர்ச்சியை ஒடுக் குவதற்கு கடுமையான வழி முறைகளை பின்பற்றியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத படுகொலைகளுடன் தொடர்புடைய ஒருவருக்கு அமெரிக்க விசா வழங்கப்பட முடியாது என அமெரிக்க நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உடுகம்பொலவின் மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளுக்கு அமெரிக்கப் பிரஜை உரிமை வழங்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

## பாகிஸ்தான் வலியுறுத்தல்

காஷ்மீரில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவிடம் கோரிக்கை வைத்துள்ளது. இது சம்பந்தமாக நேற்று இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற வாராந்திர ரீதியிலான கூட்டத்தில் இஸ்லாமாபாத்தில் வெளியுறவுத்துறை அலுவலக செய்தித்தொடர்பாளர் தஸ்நிம் அஸ்லாம் கூறியதாவது.

காஷ்மீர் மக்களின் விருப்பத்தின்படி பொதுவாக்கெடுப்பு நடத்தியே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். காஷ்மீர் விவகாரம் ஒரு சட்டப்பிரச்சினை. பொது வாக்கெடுப்பை வலியுறுத்தும் காஷ்மீர் மீதான ஐ.நா. தீர்மானத்திற்கு இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை ஒரு மாற்றுத் தீர்வாக இருக்காது.

இந்தியாவுடன் போடப்பட்ட சிம்லா ஒப்பந்தத்தினால் ஐ.நா. தீர்மானத்தை செயலிழக்க வைத்துவிட முடியாது. பாகிஸ்தான் உயர் ஆணையர் அப்துல் பாசித் ஷரியத் தலைவர்களை சந்தித்ததில் எந்த தவறும் இல்லை. பாகிஸ்தான் எப்போதுமே அவர்களிடம் ஆலோசனை நடத்துவது வழக்கம் என அவர் இவ்வாறு ளதெரிவித்தார். (இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். மீது குண்டு பொழிந்த பிரிட்டன்

## புகைப்படங்கள் வெளியாகின



உலக மக்களை அச்சுறுததிக் கொண்டிருக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது முதன்முறையாக பிரிட்டன் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்திவரும் வேளையில், முதன் முறையாக பிரிட்டன் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்நத விமானப்படை, தீவிரவாதிகளின் இலக்குகளை நோக்கி நேற்று முன் தினம் சக்தி வாய்ந்த குண்டுகளையும், ஏவுகணைகளையும் வீசியது.

இந்த தாக்குதலில் தீவிரவாதிகளின் பல இலக்குகள் தரைமட்டமாகிவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தாக்குதல்களை பிரித்தானியாவின் பாதுகாப்பு செயலாளர் மைக்கேல் போலன் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் முதன்முறையாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்காவுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க போவதாகவும் தெரிவித்துள்ளார். (இ)




### சீனாவில் பறக்க விடப்பட்ட 10,000 புறாக்கள் சோதனை

சீனாவில் கடந்த முதலாம் திகதி 65 ஆவது தேசிய தினம் கொண்டாடப்பட்டது. அன்று சமாதானத்தை குறிக்கும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க டியானமென் சதுக்கத்தில் 10 ஆயிரம் புறாக்கள் பறக்க விடப்பட்டன.

தற்போது சீனாவில் தீவிரவாதம்பெருகிவருகிறது. ஆங்காங்கே வெடிகுண்டு தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் பறக்க விடப்படும் புறாக்களில் வெடிகுண்டு போன்ற மர்மப் பொருட்களை கட்டி விட்டு அதன் மூலம் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக உளவுத் துறைக்கு தகவல் கிடைத்தது.

அதை தொடர்ந்து டியானமென் சதுக்கத்தில் பறக்க விட தயாராக வைத்திருந்த 10 ஆயிரம் புறாக்களையும் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தினர். புறாக்களின் இறகுகள், கால்கள் மற்றும் பின்பகுதியில் இச் சோதனை நடைபெற்றது.

அதன் பின்னர் இந்த புறாக்கள் அனைத்தும் ஒரு வாகனத்தில் அடைக்கப்பட்டது. பின்னர் வாகனம் 'சீல்' வைக்கப்பட்டு விழா நடந்த டியானமென் சதுக்கத்துக்கு கொண்டு வரப்பட்டு வானில்பறக்க விடப்பட்டன. (இ)

# கோரத்தாண்டவம்

## 5500 பேரை கொன்று குவித்த ஐ.எஸ்.ஐ.எஸ்

(பக்தாத்)

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசம் என்ற புதிய நாட்டை உருவாக்கியுள்ளனர். அங்கு வாழும் சிறுபானமை யாஷிடி மக்களை மதம் மாற கட்டாயப்படுத்துகின்றனர்.



மதம் மாற மறுப்பவர்களை கொன்று குவித்து வருகின்றனர். பலர் தீவிரவாதிகளிடம் இருந்து தப்பிக்க அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

கடந்த ஜூன் மாதம் முதல இதுவரை அங்கு 5 ஆயிரத்து 500 பேரை தீவிரவாதிகள கொன்றுள்ளனர். இந்த தகவலை ஐ.நாவின ஈராக் பிரதிநிதிநிகோலே மிலாடெனோவ் தெரிவித்துள்ளார். (இ)

### தாயால் கடத்தப்பட்ட சிறுமி 12 ஆண்டுகளுக்குப் பின் மீட்பு

மெக்சிகோவில் 12 ஆண்டுகளுக்கு முன்னர் தனது தாயால் கடத்தப்பட்ட பெண் தற்போது மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு சப்ரினா என்ற சிறுமி, நான்கு வயதாக இருக்கும் போது அவளது தாயாரால் கடத்தபபட்டார். இச்சிறுமியை தீவிரமாக தேடி வந்த நிலையில், மெக்சிகோவல் இருந்து 140 கி.மீ தொலைவிலுள்ள எல்டா யேடா ட்ளாக்ஸ்கள என்ற நகரத்தின் அருகே தாயும், மகளும் இருப் பதை மீட்பு படையினர் கண்டு பிடித்தனர்.

தற்போது அப்பெண்ணுக்கு 17 வயதாகிறது. தனது மகள உயிருடன் பாதுகாப்பாக இருப்பதாக வரும்செய்தி தனக்கு மகிழ்ச்சியை தருகிறது என அப் பெண்ணின்தந்தையான க்ரெக அல்லன் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒட்டுமொத்த குடுமபமும் மீட்பு படையினருக்கு நன்றி தெரிவித்து கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். க்ரெக்குக்கும் அவரது மனைவி பாரா மேரிலோரெஞ்சுக்கும்இடையே விவாகரத்து ஏற்பட்டபோது சப்ரினா தந்தையின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை தொடர்ந்தே சப்ரினாவை அவளது தாய் கடத்திக் கொண்டு சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# பாகிஸ்தானைச் சேர்ந்த 16 விமான பணிப்பெண்கள் கனடாவில் மாயம்!

பாகிஸ்தான் சர்வதேச ஏர்லைன்சில் பணிபுரிந்த விமான பணிப்பெண்கள் மற்றும் கேபின் பெண்கள் கனடாவல் மாயமாகியுள்ளனர். இந்த தகவலை பாகிஸ்தான் சர்வதேச ஏரலைன்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் பாகிஸ்தான் சர்வதேச ஏர்லைன்ஸ் (பி.ஐ.ஏ.) இல் வெளிநாடு சென்ற 4 விமானப் பணிப்பெண்கள் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து மாயமாகியுள்ளனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த 5 மாதங்களில் 16 இற்கும் மேற்பட்ட விமானப் பணிப்பெண்கள் கனடாவிற்கு சென்ற பின்னர் பாகிஸ்தான் திரும்பவில்லை என்பதை பி.ஐ.ஏயும் உறுதிப்படுத்தியுள்ளது என்று அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் சர்வதேச ஏர்லைன்ஸ், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், அவர்கள் மீது சர்வதேச விமான போக்குவரத்து சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம் எனறு அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

17 ஊழியர்கள் வேலை பார்க்கும் விமான நிறுவனத்தில் 36 விமான போக்குவரத்து சேவை மட்டுமே செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது. (இ)

# ஜப்பான் எரிமலைச் சீற்றத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



ஜப்பான் தலைநகர் டோக்கியோ அருகே உள்ள மவுண்ட ஆன்டேகே எரிமலை வெடித்து சிதறியதில் பலியானோர் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது.

சம்பவ இடத்துக்கு இராணுவம் விரைந்து சாம்பலுக்குள் புதைந்துள்ள உடல்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம என்று அஞ்சப்படுகிறது.

ஜப்பான் தலைநகர டோக்கியோவில் இருந்து சுமார் 210 கி.மீ. தொலைவில் உள்ள மவுன்ட் ஆன்டேகே எரிமலை கடந்த மாதம் 27 ஆம் திகதி திடீரென வெடித்து சிதறி அபாயகரமான அளவில சீற்றத்துடன் அனல் குழம்பை கக்கியது.

எரிமலை வெடித்து சிதறி பகுதி வெளியே வெடித்து சிதறிய பாறைகள் சுமார் 5 கி.மீ. தொலைவுக்கு தூக்கி வீசப்பட்டன. இதனை அடுத்து எரிமலையை ஹெலிகொபடர் மூலம் கண்காணித்த அதிகாரிகள் சீற்றத்தின் காரணமாக இரண்டு நாட்களுக்கு மீட்பு பணி மேற்கொள்வதில் சாத்தியமில்லை என்று தெரிவித்தனர்.

தொடர்ந்து கடந்த இரண்டு நாட்களாக இராணுவத்தினர் மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகளில் 46 பேரின உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எரிமலையை சுற்றிலும் சுமார் 200 கி.மீ. அளவுக்கு எரிக்குழம்பு பரவி அடர்த்தியான சாம்பல் போர்வை போர்த்தியது போன்ற தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. இதுவரை 40இறகும் அதிமானோர் காணாமற்போன தாக புகார்கள் அந்த பகுதி அதிகாரிகளுக்கு வந்துள்ளன.

எரிமலை சீற்றத்துக்கு பல மலை ஏறும் சாகச வீரர்கள், சுற்றுலா பயணிகள் சிக்கி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. எரிமலை பகுதியின் அடிவாரத்தில் உள்ள கிராம பகுதிகள் முழுவதும் சாம்பலால் சூழப்பட்டுள்ளன.

இதனிடையே சம்பவத்துக்கு பின்னர் தொடர்ந்து எரிக்குழம்பு வெளியேறுவதால் மீட்புப்பணிகள் அடுத்த கட்டத்தை நெருங்கவே இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் பலி எண்ணிக்கை குறித்த தகவலை ஜப்பான் அரசு உறுதிப்படுத்தாமல் உள்ளது. இந்த நிலையல் எரிமலைஅருகேஉள்ளநகனோ என்ற கிராமத்தில் சிலர் மாரடைப்பு ஏற்பட்டு பலியானதாக தெரிகிறது. சுமார் 80 கி.மீ.காற்றில் அமில வாயு கலந்து மாசு ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

கிராமங்களில் இறந்தவர்கள் பற்றிய தகவலை ஜப்பான் அரசு உறுதி செய்யவில்லை. அந்த நாட்டின் நடைமுறைப்படி, பிரேத பரிசோதனை செய்து முடியாமல் அதுபற்றிய தகவல் வெளியிடப்படுவதில்லை.

மவுண்ட் ஆன்டேகே ஜப்பானின் 2ஆவது மிக பெரிய எரிமலை ஆகும். இதன் உயரம் 3 ஆயிரத்து 67 மீற்றர் ஆகும். முன்னதாக 1979 ஆம் ஆண்டு இந்த எரிமலை மிக பெரியளவில் சீற்றத்தை வெடித்து சிதறி ஏற்பட்டது. இதன் பின்னர் சுமார் 40 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும்வெடித்து மவுண்ட் ஆன்டேகே எரிமலை ஜப்பானில மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜி கண்ட சத்தியாக்கிரகம்!



உண்மையில் காந்தியிசம் என்றால் என்ன என்று எனக்கே தெரியாது. நாட்டிற்கு நான் புதிதாக ஏதும் வழங்கவில்லை. இந்தியாவின் பாரம்பரியம் மிக்க மெய்யறிவுக்கு ஒரு புது வடிவம் அளித்துள்ளேன். அவ்வளவுதான். ஆகவே, அதனை காந்தியம் என்று கூறுவது தவறு என்று 1940 பெப்ரவரி 20 அன்று மலிகண்டாகாதி கண்காட்சியைத் திறந்து வைத்து ஆற்றிய உரையில் மகாத்மா காந்தி தன்னடக்கத்துடன் கூறியுள்ளார்.

1936 இல் காந்தி சேவா சங்க அமைப்பாளர் கூட்டத்தில் காந்திஜி பேசுகையில், காந்தியிசம் என்று நான் எதையும் உருவாக்கவில்லை. எந்த ஒரு சமய உள்பிரிவையும் விளக்க முற்படவில்லை. எந்த ஒரு தனி சித்தாந்தத்தையும் தோற்றுவித்ததாக உரிமை கொண்டாடவில்லை. அவ்வாறு தோற்றுவிக்க முயற்சி செய்யவும் விரும்பவில்லை.

எவ்விதப் பொருள் கூறுகையில் விரிவாகத் திட்டமிட்டு ஆய்வு செய்யாமல், சத்தியம், அகிம்சை எனும் நிரந்தர நியதிகளை நமது அன்றாட வாழ்வில் அனுசரிப்பதற்கும், எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தீர்வுக்குப் பயன்படுத்துவதற்கும் என் வழியில் முயற்சி செய்து வருகிறேன் என்றார்.

இந்துமதத்திலும் புத்த சயன சமயங்களிலும் அகிம்சை வெவ்வேறு விதமாக அடிப்படைத் தத்துவமாகப் போதிக்கப்பட்டுள்ளது. அகிம்ஷா பரமோ தர்மஹ என்பது மகாபாரத வாக்கியம். அதனை காந்திஜி அடிக்கடி மேற்கோள் காட்டுவார்.

ஆயினும், முனிவர்கள், சாதுக்கள், துறவிகள் போன்ற புனிதர்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய தர்மமாகவே அகிம்சை பண்டைய காலத்தில் கருதப்பட்டு வந்தது. இந்த மனப்பான்மையை மாற்றி, அகிம்ஸா தர்மத்தைச் சமூகமும், நாட்டு மக்களும் பின்பற்றுவதற்கான வழிமுறையாக வகுத்தளித்ததுதான் காந்திஜி புகுத்திய மகத்தான புரட்சியாகும்.

அரசாங்கமேகூட அகிம்சை அடிப்படையில் அமையப் பெறலாம். மக்கள் மனம் வைத்தால் என்றார் அண்ணல் காந்தி. பெருவாரியான மக்கள் அகிம்சையைப் பின்பற்ற முடியும் என்கிற என் முயற்சி உலக வரலாற்றிலேயே ஒரு புதிய பரிசோதனை ஆகும் என்று காந்திஜி ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

ஆயினும் ஒரு அரசாங்கம் முற்றிலுமாக அகிம்சை அடிப்படையில் அமைவது என்பது இயலாத காரியம் என்பதை அவர் பின்னர் உணர்ந்தார். அரசாங்கம் அகிம்சையாளர்களின் தனியுரிமை ஆட்சி அல்ல. ஆகவே, முழுமையான அகிம்சாபூர்வ ஆட்சி முறை என்ற பொற்காலத்தை நான் இன்று கனவு காண்பதற்கில்லை. அவ்வாறாயினும் ஒரு சமூகம் பெருமளவில் அகிம்சையைப் பின்பற்றுவதற்கான சாத்திக்கூறுகள் உள்ளன. அத்தகைய சமூகத்தினரை ஆளும் அரசாங்கமும், சட்டம்- ஒழுங்கை அமல்படுத்துவதன் பொருட்டு, மிகக் குறைந்த அளவே வன்முறையைக் கையாளும். ஏனெனில், எந்த அரசும் அராஜகத்தை அனுசரிப்பதற்கில்லை அல்லவா? என்றார்.

காந்திஜி ஒரு யதார்த்தவாதி. ஆகவேதான், தாம் வகுத்த அகிம்சை நியதிக்கு விதிவிலக்குகளையும் அளித்தார். எந்த ஒரு உன்னதக் கொள்கையையும் எவராலும் நூற்றுக்கு நூறு சதவீதம் அனுஷ்டிக்க இயலாது. உடலோடு கூடிய இக வாழ்வில் இம்சையை அடியோடு தவிர்க்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

அவ்வப்போது அவர் அளித்த விதிவிலக்குகளின் பட்டியல் வெகு நீளம்! உதாரணமாக கள்வர்கள், கொள்ளையர்கள், அத்துமீறி அக்கிரமமாக நடந்துகொள்பவர் யாராயினும் அது அகிம்சையா, ஹிம்சையா என்ற கேள்விக்கு அத்தருணங்களில் இடமில்லை என்றார்.

பெண்கள் தமது மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பற்கள், நகங்கள், ஏன், கத்தியால்கூட அந்த அயோக்கியர்களைத் தாக்கலாம் என்றார்.

விஷ ஜந்துக்களையும் பாம்புகளையும் குரங்குகளையும் எலிகளையும் மக்களை அச்சுறுத்தும் தெரு நாய்களையும் கொல்லலாம். விலங்குகளைக் காப்பாற்றும் பொருட்டு மனித உயிருக்கு ஆபத்து விளைவிப்பதை நான் ஒருபோதும் ஒப்பமாட்டேன் என்று கூறினார்.

சத்தியாக்கிரகம் எனும் தத்துவம் காந்திஜியின் கண்டுபிடிப்பு. சத்தியாக்கிரகம் என்ற சொற் பிரயோகங்கள் பண்டைய வடமொழி நூல்களில் கூடக் கிடையாது.

ஸ்ரீராமர், பீஷ்மர், அரிச்சந்திரன் போன்றவர்களை சத்திய விரதன், சத்திய சந்தன் என்றெல்லாம் கூறுவதுண்டு. ஆனால், சத்தியாக்கிரகி (சத்தியத்தை நிலைக்களனாகக் கொண்டவர்) என்பது காந்திஜி உருவாக்கிய சொற்பிரயோகம்.

தீமையைத்தான் எதிர்க்க வேண்டும். தீமை விளைவிப்பவனை அல்ல என்பதே காந்திஜியின் சத்தியாக்கிரகக் கொள்கை.

சத்தியாக்கிரகம் என்பதன் கருத்தை காந்தி மகான் தோரோ நூலிலிருந்து கிரகித்தார் என்று கூறுவோர் உண்டு. ஹென்றி டேவிட் தோரோ (1817-1862) என்ற அமெரிக்க நூலாசிரியர் எழுதிய இண்ஸ்ண்ப் ஈண்ளர்க்ஷங்ய் ஸ்ரீங் என்ற நூலில் அரசாங்கத்திற்கு எதிராகத் தனி மனிதனின் உரிமைகளைப் பற்றி அலசியுள்ளார்.

மக்கள் த்ங்களின் உரிமைகளை வலியுறுத்தவும், மக்கள் விரோத சட்டதிட்டங்களை எதிர்க்கவும் சட்ட மறுப்பு மேற்கொள்ளலாம் என்பது போன்ற கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

ஆனால், காந்திஜி இந்திய ஊழியர் சங்க முக்கிய உறுப்பினரான பி.கோதண்டராவ் என்பவருக்கு 1935 செப்ரெம்பர் 10 அன்று எழுதிய கடிதத்தில் நான் தோரோவின் நூல்களிலிந்து சத்தியாக்கிரகக் கருத்தை கிரகித்தேன் என்று கூறுவது தவறு. தென்னாபிரிக்காவில் எனது சத்தியாக்கிரக இயக்கம் வெகுவாக முன்னேறிய பிறகே நான் தோரோவின் சிவில் டிஸ்ஒபீடியன்ஸ் என்கிற கட்டுரைத் தொகுப்பைப் படித்தேன். அதன்பிறகு ஆங்கிலேய வாசகர்களுக்குப் புரிவதற்காக, குஜராத்தி சொல்லான சத்தியாக்கிரகத்தை, சிவில் டிஸ்ஒபீடியன்ஸ் என்று குறிப்பிடத் தொடங்கினேன். ஆனால், அந்த சொல் எனக்கு அவ்வளவாகத் திருப்தியளிக்கவில்லை. ஆகவே, பின்னர், சிவில் ரெஸிஸ்டன்ஸ் (சட்ட மறுப்பு) என்ற சொல்லை உபயோகிக்கத் தொடங்கினேன் என்று விளக்கியுள்ளார்.

நந்தனார் சரித்திரத்தை 1927 இல் யங் இந்தியா வார இதழில் படித்த காந்திஜி, நந்தனார் தன்னை வருத்திக் கொண்டாரே தவிர, தன்னை இழிவு செய்தவர்களை எதிர்க்கவோ, கடிந்துரைக்கவோ இல்லை. தனது தூய பக்தியால் இறுதியில் வெற்றி பெற்றார் என்பது சத்தியாக்கிரகிக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றார்.

சத்தியாக்கிரகம், நியாயமான கோரிக்கைகளுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். சத்தியாக்கிரகிகளுக்குக் கடவுள் பக்தி மிக அவசியம். சத்தியாக்கிரகிகளுக்குக் கடவுள்தான் துணை என்றெல்லாம் காந்திஜி வலியுறுத்தியுள்ளார்.

19.02.1925 திகதியிட்ட யங் இந்தியா வார இதழில் பின்வருமாறு முத்திரை குத்திகிறார். நான் படித்தறிந்த தமிழ்ப் பாடங்களில் ஒரே ஒரு பழமொழி மட்டும் என் மனதில் இன்றும் பசுமையாகப் பதிந்துள்ளது. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பதே அப்பழமொழி. சத்தியாக்கிரகம் எனும் எனது தத்துவம் அந்தப் பழமொழி உணர்த்தும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே ஆகும்.

ஒத்துழையாமை என்ற சொல்லை முதன்முதலாக அரசியலில் புகுத்திப் புதுமை விளைவித்தவரும் மகாத்மா காந்திதான்.

1919 நம்பரில் தில்லியில் ஒரு கிலாபத் முஸ்லிம் மாநாட்டில் பங்கேற்றிய போது பிரிட்டிஷ் அநீதி அரசுடன் இனி ஒத்துழைக்க மாட்டோம் என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டபோதுதான் அதற்கு ஒத்துழையாமை இயக்கம் என்று பெயர் சூட்ட வேண்டுமெனத் தமக்குத் திடீரென்று தோன்றியதாக காந்திஜி தமது சுயசரிதையில் கூறியுள்ளார்.

ஒத்துழையாமை என்பது சத்தியாக்கிரகத்தின் ஒரு கிளை என்றும் சத்தியாக்கிரக ஆயுதக் கிடங்கில் ஒத்துழையாமை ஒரு முக்கிய ஆயுதம் என்றும் காந்திஜி விளக்கம் அளித்துள்ளார்.

பொருளியல் பற்றித் தமக்கு அதிகம் தெரியாது என்று காந்திஜி கூறி வந்த போதிலும் பொருளாதார மேதை பெந்தாம் அறிவித்த பெரும்பாலான மக்களின் அதிகபட்ச நலன் என்கிற குறிக்கோளை காந்திஜி கண்டனம் செய்தார். அவ்வாறெனில் பெரும்பாலானோரின் நலன் 'பொருட்டு சிறுபான்மையினரின் நலன் பாதிக்கப்படினும் அக்கறையில்லை என்றாகிறது என்றார்.

அனைத்து மக்களும் நலன் பெறுதல், கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற மாற்றுக் கருத்தை முன்வைத்தார். நலன் பெறுதல் என்றால் வெறும் உலகாயத பொருள் குவிப்பும், தேவைகளை அளவுக்கு மீறி பெருக்கிக் கொண்டே போவதும் அல்ல. அரசியல், சமூக, குறிப்பாக, ஆன்மிக ரீதியில் அனைவரும் உய்வு எய்த வேண்டும் என்பதே காந்தி மகானின் லட்சியக் கனவான சர்வோதய சமூதாயம்!

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்த போட்டியிடுவது குறித்து

# உயர் நீதிமன்றம் தான் முடிபு செய்ய வேண்டும்

## ஐ.தே.க.எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது முறையாக மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியுமா என்பதற்கான முடிவினை உயர் நீதிமன்றமே வழங்க வேண்டும்.

எனவே நாட்டில் சுயாதீன நீதிமன்றம் காணப்படுமாயின் நல்லதொரு தீர்ப்பு கிட்டும் என ஐ.தே. கட்சி தலைமைத்துவ சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கருஜெயசூரிய தெரிவித்தார்.

அத்தோடு முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எமது கொள்கைக்கு உடன்பட்டால் ஐ.தே. கவுடன் இணைவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த ஜனாதிபதி தேர்தல் ஜனவரி மாதம் நடத்தப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் அதற்கான ஏற்பாடுகளில் அரசாங்கம் மும்முரமாக செயற்பட்டு வருகின்றது.

இருப்பினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய சரத் என். சில்வாவின் கூற்று தொடர்பாக இந்தியா உள்ளிட்ட சர்வதேச சட்ட வல்லுநர்களிடம் வினவிய போது நீதியரசரின் கூற்று யதார்த்தமானது என்று கூறினர்.

எனினும் இதற்கான தீர்வினை உயர் நீதிமன்றமே வழங்க வேண்டும். எனவே நாட்டில் சுயாதீன நீதிமன்றம் காணப்படுமாயின் நிச்சயமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது.

அத்தோடு இது தொடர்பிலான தீர்மானத்தை எடுக்க வேண்டிய பொறுப்பு பாராளுமன்றத்திடமே காணப்படுகிறது. ஏனெனில் 18 ஆவது திருத்தத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டும் அதனை நிறைவேற்றியது பாராளுமன்றமேயாகும்.

இதேவேளை, ஐ.தே.கட்சி தற்போது வலுவடைந்துள்ள நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட எந்தவொரு கட்சியையும் இணைத்துக்கொள்ள ஐ.தே.க. தயார்.

எனினும் எமது கட்சியின் கொள்கைகளுக்கு குறித்த கட்சியே உடன்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)




ஊடகவியலாளர் சட்டத்தரணிகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று கோட்டை புகையிரத நிலையம் முன்னால் நேற்று முந்தினம் 12 மணியளவில் இடம்பெற்றது. இவ் சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டின் கீழ் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

# அதிகாரத்தை கைப்பற்றுவது தொடர்பில் தமிழ்க்கூட்டமைப்புடன் பேச்சு கிடையாது

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

அதிகாரத்தைக் கைப்பற்றுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசப்போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

தமிழ், முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ, முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கி வரும் காணி மற்றும் பாடசாலை பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது. கடந்த வாரம் இந்த சந்திப்பு நடத்தப்படவிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்த சந்திப்பு நடத்தப்படவில்லை.

எதிர்வரும் வாரத்தில் கொழும்பில் இந்த சந்திப்பு நடத்தப்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்கவுள்ளதாக ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் கூட்டாக இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீளவும் இணைக்க முயற்சிப்பதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து சுயாட்சி அதிகாரங்களை நிறுவும் முனைப்புக்களில் இரு கட்சிகளும் ஈடுபட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் [illegible] தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### படித்தால் மட்டும் போதுமா?

ஓர் ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெயர் சோமநாதர். மிகவும் நல்லவர். அவரிடம் பணமும் இருந்தது. நல்ல குணமும் இருந்தது. அடுத்தவருக்குத் தம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர் அவர். அவ்வப்போது அவரால் முடிந்த அளவுக்கு நல்ல செயல்களை செய்து கொண்டிருப்பார். ஒரு நாள் அவர் இரண்டு பண்டிதர்களைச் சந்தித்தார்.

ஒருவர் பெயர் ஞான பண்டிதர். இன்னொருவர் பெயர் இராம பண்டிதர்.

அந்த இரு பண்டிதர்களையும் தம் இல்லத்துக்கு அழைத்து விருந்து வைக்க வேண்டும் என்று விரும்பினார் சோமநாதர்.

"கொஞ்சம் எங்க வீட்டுக்கு நீங்க வந்துட்டுப் போகணும்..." என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டார். அவர்களும் உடனே சம்மதித்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் இருவரும் சோமநாதர் இல்லத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இவர் மிகவும் அன்போடு அவர்களை வரவேற்றார். விருந்துக்கு ஏற்பாடு பண்ணினார்.

இற்கிடையே அந்த இரண்டு பண்டிதர்களில் ஒருவர் "நான் முதல்லே ஆற்றுக்குப் போய்க் குளிச்சிட்டு வர்றேன்..." என்று சொல்லிப் புறப்பட்டார். அவர் புறப்பட்டுப் போன பின்பு அங்கே இருந்த இன்னொரு பண்டிதரிடம் சோமநாதர் பேச்சுக் கொடுத்தார்.

இப்ப குளிக்கப் போயிருக்கிறாரே ஞான பண்டிதர்... அவர் ஒரு பெரிய தத்துவ ஞானி.,... அப்படின்னு ஊர் உலகம் எல்லாம் பேசிக்கிறாங்களே... என்றார். இப்படி இவர் அவரைப் புகழ்ந்து பேசியதை இராம பண்டிதரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. உடனே பொரிந்து தள்ளினார்.

ஊரு உலகத்துக்கு என்ன தெரியும் அவரைப் பற்றி? அவர் ஒரு பெரிய வித்வான்னு சொல்லிக்கிற அளவுக்கு அவர் கிட்டே என்ன இருக்கு? ஒண்ணுமில்லை! எல்லாம் வெறும் வேடம். உண்மையை சொல்லப் போனா அது ஒண்ணும் தெரியாத மாடு!

சோமநாதருக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. அவர் இப்படிச் சொல்லுவார் என்று அவர் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. மனம் நொந்து போய்ப் பேசாமல் உட்காந்திருந்தார்.

கொஞ்சநேரம் ஆயிற்று. குளிக்கப் போயிருந்த ஞான பண்டிதர் திரும்பி வந்தார். அவர் வந்த பின்னர் இவர் குளிக்கப் புறப்பட்டார்.

இவர் போன பின்பு ஞான பண்டிதரிடம் மெல்லப்பேச்சுக் கொடுத்தார் சோமநாதர். ஏங்க...உங்க கூட்டாளி இராம பண்டிதர் பெரிய ஞானி போல இருக்கே...? என்றார்.

அவ்வளவுதான். இதைக்கேட்டதும் அவர் முகம் வாடிப் போயிற்று. அப்புறம் சொன்னார். யாருங்க ஞானி...? அவரா ஞானி...? அவரைப்பற்றி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது போல இருக்கு...! உண்மையைச் சொல்லணும்னா அது ஒரு மோசமான கழுதை!

இதைக்கேட்டதும் சோமநாதர் இன்னமும் நொந்து போனார். பதில் எதுவும் பேசவில்லை. பேசாமல் இருந்து விட்டார்.

சாப்பாட்டுநேரம்வந்தது. குளிக்கப்போயிருந்தவரும் வந்து சேர்ந்தார். இரண்டு பண்டிதர்களையும் சோமநாதர் அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தார். அவர்களுக்கு முன்னால் இரண்டு தட்டுகள் வைக்கப்பட்டன. ஒரு தட்டிலே புல்லைக் கொண்டு வந்து வைத்தார். இன்னொரு தட்டிலே தவிட்டைக் கொண்டு வந்து வைத்தார். இதைப்பார்த்தவுடனே இந்தப் பண்டிதர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

எங்களை என்ன மிருகம்னு நினைச்சுட்டீங்களா? எங்களை இப்படி அவமானப்படுத்துவதற்காகவா உங்க வீட்டுக்குக் கூப்பிட்டீங்க? என்று சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

அய்யய்யோ... அப்படியெல்லாம் நினைச்சுடாதீங்க! உங்க வார்த்தைக்கு மரியாதை கொடுத்தேன். அவ்வளவுதான் என்ன சொல்றீங்க?

நீங்க தான் அவரை மாடுன்னீங்க! அவருதான் உங்களைக் கழுதைன்னார். மாடும் கழுதையும் என்ன சாப்பிடுமோ அதைத்தான் உங்க முன்னாடி வச்சேன். முதல்லே நான் உங்களைப் பண்டிதர்கள்னு நினைச்சி விருந்துக்கு ஏற்பாடு பண்ணினேன். நீங்க இங்கே வந்த பிறகுதான் நீங்க யாருங்கறதை உங்க மூலமாகவே புரிஞ்சுக்கிட்டேன். அதுக்குப் பிறகு அதுக்குத் தகுந்த மாதிரியான விருந்தை ஏற்பாடு பண்ணினேன். அவ்வளவுதான்.

பண்டிதர்கள் இருவரும் தலை குனிந்தார்கள். இப்படி ஒரு கதையைப் பெரியவர்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். இளைஞர்களே! இந்த உலகத்திலே நாமெல்லாம் அதிகம் படித்து விட்டால் மட்டும் போதாது. பண்பாடு வேண்டும்.

அதுதான் முக்கியம். இன்றைய மனிதர்களிடம் படிப்பு அதிகமாக இருக்கிறது. பண்பாடு குறைவாக இருக்கிறது. இதுதான் இன்றைய நெருக் கடிகளுக்கெல்லாம் மூல காரணம். படிப்பு வளர வளரப் பண்பும் வளர வேண்டும். இப்படி வளர்ந்தால் இறக்கைகள் சுலபமாக விரியும்.

ஆனால் இன்றைய மனிதர்கள் அப்படியா இருக்கிறார்கள். இப்போதும் நம்மில் பல பேர் அடிக்கடி தங்களை சுற்றியுள்ளவர்களை மிருகங்களுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்காமல் இருப்பதில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு 2924 புசல் விதை நெல் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் பருவ மழை இன்மையால் நெற்செய்கை அழிவடைந்திருந்தது.

இந்நிலைமையினால் விவசாயிகள் இவ்வாண்டு காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு விதை நெல் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனை கருத்தில்கொண்டு கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 924 புசல் விதைநெல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நேற்று முன்தினம் கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் ஆயிரத்து 462 ஏக்கர் நிலப்பரப்பிற்கான 2 ஆயிரத்து 924 புசல் விதை நெல் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு



விவசாயிகளுக்கு விதை நெல்லை வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி, அக்கராயன், உருத்திரபுரம், புளியம்பொக்கணை, முழுங்காவில் கமநலசேவை நிலையங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கே விதை நெல் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருத்து தெரிவித்த அவர்,

கடந்த வருடம் பருவ மழை பொய்த்து போனமையால் இவ்வருடம் விவசாயிகளுக்கு விதை நெல்லை கூட பெற முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாக விதை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்ப்படுகின்ற விதை நெல் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

பூநகரியில் அண்மையில் சோஆ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விதை நெல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தற்போது உலக உணவு விவசாய அமைப்பினால் வழங்கப்படுகின்ற விதை நெல் விநியோகிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து அரசினால் வழங்கப்படவுள்ள விதை நெல்லும் விரைவில் விவசாயிகளுக்கு கிடைக்கவுள்ளது.

எனவே விவசாயிகள் இந்தச் சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மண்ணை நம்பி வாழ்கின்ற விவசாயிகள் காலத்திற்கு ஏற்ப மாற்றங்களையும் கவனத்தில் எடுத்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறைந்தளவு உற்பத்தி செலவில் அதிகளவு இலாபத்தை தரக்கூடிய விவசாய நடவடிக்கைகளுக்கு மாற வேண்டும்.

குறிப்பாக விவசாயிகள் அழிவிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்கு விவசாய காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## வாண்மை விருத்தி செயலமர்வு

கல்வி அமைச்சும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் வணிக கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் வணிக துறைசார் ஆசிரியர்களுக்குமான **வாண்மை விருத்தி** எனும் தொனிப் பொருளினாலான செயலமர்வு எதிர் வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 9 ஆம் திகதி வியாழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை 11 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நான்கு தினங்கள் காலை 8 மணி தொடக்கம் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே வடமாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் கடமையாற்றும் வணிக கல்வி பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (2-15)






## தனியாருக்கு சொந்தமான காணியில் குண்டு மீட்பு



வவுனியா வேப்பங்குளத்தில் தனியாருக்கு சொந்தமான காணியொன்றில்குண்டுமீட்கப்பட்டுபொலிஸாரினால் செயலிழக்கப்பட்டது.

இக்குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.இதுதொடர்பில்தெரிய வருவதாவது, வவுனியா வேப்பம் குளப் பகுதியில் நேற்று முன்தினம் காலை வெற்றுக்காணியொன்றில் கிணறு வெட்டப்பட்டுக்கொண்டிருந்தவேளையில் அயல் காணியில் குண்டு இருப்பதை அவதானித்த காணி உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசேட அதிரப்படையினரின் உதவியோடு குண்டை செயலிழக்கச் செய்தனர்.

இதேவேளை இக் காணியின் முன்காணியில் முன்னர் இராணுவத்தினரின் முகாம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# 2 ஆயிரத்து 792 மாற்றுத்திறனாளிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கின்றனர்

## புள்ளி விபரத் தகவல் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 792 மாற்றுத்திறனாளிகள் இருப்பதாக கிளிநொச்சி மாவட்ட புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 434 மாற்றுத்திறனாளிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 250 மாற்றுத் திறனாளிகளும், பூநகரி பிரதேச செயலக பிரிவில் 516 மாற்றுத்திறனாளிகளும், கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 592 மாற்றுத் திறனாளிகளும் வசித்து வருவதாக அந்த புள்ளி விபரத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் உதவி கொடுப்பனவுகள் சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்படுகின்றன.

மேலும், மிகுதி மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 250 ரூபாய் தொடக்கம் 500 ரூபாய் வரையான உதவி தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், சமூக சேவை அமைச்சினால் வழங்கப்படும் வீடமைப்பு திட்டத்திற்கு 2 இலடசத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டு வருகின்ற போதும், இதனைவிட இந்திய வீட்டுத்திட்டத்தின் பெறுமதி அதிகமாக (5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்) இருப்பதால் பயனாளிகள் இந்திய வீட்டுத்திட்டத்தை தெரிவு செய்கின்றனர்.

இது தவிர அமைச்சால் வீடுகள் திருத்துவதற்கு ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளுக்கும் தலா 65 ஆயிரம் ரூபாய் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றது.

உலக வங்கியின் 55 இலட்சம் ரூபாய் நிதியுதவியுடன் மாற்று திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதகால பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை விட அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் மற்றும் நலன்விரும்பிகள் மூலமும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

**உயர்கல்வி வாய்ப்புக்களும் தொழில் முறைகளும்** எனும் தலைப்பில் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயபாலன் பல்கலைக்கழக அனுமதி முறைமை மற்றும் தொழிற்கல்வி உயர்கல்வி எனும் இரு தலைப்புகளில் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்வி பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் க.சக்திதரன் தொழில்நுட்ப பாடத்தின் முக்கியத்துவமும் தொழில்வாய்ப்புக்களும் எனும் தலைப்பில் PVTC மாங்குளம் போதனாசிரியர் பிரிசாந்தன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (2-15)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட தேசிய சேமிப்பு வங்கியின் ஏற்பாட்டில் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி குறித்த வங்கியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் இ.ஜோஇன்பராஜ் உரையாற்றுவதையும், உதவி முகாமையாளரினால் முதியோர் ஒருவருக்கு அன்பளிப்பு பொருள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# சிவநகர் முதியோர் சங்க மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டுநாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிவநகர் முதியோர் சங்கத்தின் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு கிளி/சிவநகர் அ.த.க பாடசாலையின் முதியோர் சங்கத்தின் தலைவர் அ.இரகுபதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட உளநல வைத்திய நிபுணர் டாக்டர்.மா. ஜெயராஜா, வவுனியா கரைச்சி பிரதேச செயலர் டோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் இ.ஜோஇன்பராஜ் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபை தலைவர் நா.வை.குகராஜா, கிளிநொச்சி மீள் எழுச்சி திட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் அ.விஜயகிருஷ்ணன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன், கரைச்சி முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தி அலுவலர், கே.காாந்திமதி, சிவநகர் கிராம அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக நேற்று ஆண் முதியோர்களுக்கான வேக நடைப் போட்டியும் பெண் முதியோர்களுக்கான சங்கீதக் கதிரைப் போட்டியும் நடைபெற்றமைகுறிப்பிடத்தக்கது.

எனவே கௌரவிப்பு நிகழ்வில் அனைத்துசிவநகர்மூத்தோர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.(2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## அமெ.விளக்கம்



(கொழும்பு)

இலங்கை தொடர்பான அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம் தெரிவதாக வெளியான செய்திகளை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

அமெரிக்காவின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் தளர்ச்சி தெரிவதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரியுடனான சந்திப்பின்போது தான் உணர்ந்தார் என அமைச்சரவை கூட்டததில் ஜனாதிபதி மகிந்த ராஜ பகஷ தெரிவித்தார் என வெளியான செய்திகளையே அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் வெளிவிவகார பேச்சாளர் ஜென் சகி தெரிவித்துள்ளதாவது,

இலங்கை ஊடகங்களில் வெளியான தகவல்களில் ஒரு விடயம் மாத்திரம் சரியானது. வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத் தொடரின் போது இலங்கை ஜனாதிபதியை சந்தித்தார்.

இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கையில் மாற்றமெதுவும் இல்லை என்ற நோக்கத்தை தெரியப்படுத்தும் நோக்குடனேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

நிச்சயமாக இலங்கை தொடர்பான கொள்கையில் தளர்ச்சியேற்படவுமில்லை. இலங்கையுடனான எமது உறவு முழுமையாக வளர்ச்சி காணவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இலங்கை தனது பல தரப்பட்ட இன, மத குழுக்களுக்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்தாலே சாத்தியமாகும்.

இதன் காரணமாகவே இலங்கை தொடர்ந்தும் யுத்தத்தில் ஈடுபட்டிராத நாடு என்பதை காண்பிக்கும விதத்திலான அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கெர்ரி வலியுறுத்தினார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதில் பயனில்லை ஆளும் கட்சி எம்.பி



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கினாலும் அது பயனில்லை என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு ஜனாதிபதி ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது. நானும் ஆலோசனை வழங்குவேன். எவரும் கணக்கில் எடுப்பதில்லை. இறுதியில் ஓரிரு ஆலோசனை நடக்கும்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்க்கு கொள்கை என்று ஒன்றில்லை. பதவியை காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில் அவர் செயற்பட்டு வருகிறார் எனவும் ரஜீவ விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை

அ.எஸ்த்தர்-166, ஸ்.லக்சன் ராஜ்-160, அ.அனற்ஜானுஷன்-160, ம.மபிஷன்-159.

யா/புற்றளை மகா வித்தியாலயம்

வி.சுவேதா-183, பி.லக்ஷன்-178, பி.பானுஷன்-174, பி.அபிநயா-172, என்.சுமித்திரா-171, கே.கம்சிகா-166, பி.துளசிகா-162, ஐ.கணநாதன்-161.

யா/இடைக்காடு மகா வித்தியாலயம் அச்சுவேலி

கே.ஜனகன்-172, வி.கிள்ளிவளவன்-164, கே.புவீசன்-164. (இ

## மட்டக்களப்பு குருக்கள்மடம் விவகாரம்

## 30ம் திகதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

குருக்கள் மடம் முஸ்லிம் புதைகுழி தொடர்பாக ஆராய்ந்து இம் மாதம் 30 ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.றியாழ் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

குருக்கள் மடம் பிரதேசத்தில் முஸ்லிம்கள் சிலர் கடத்தி கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் புதைகுழியை தோண்டுவதற்குரிய நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு கோரி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறூக், சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஊடாக நகர்வு மனுவொன்றை களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் றியாழ், இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து இம் மாதம் 30ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

குற்றவியல்தண்டனைக்கோவைச் சட்டத்தின் இருபத்தியொராம் பிரிவின் கீழ் இது தொடர்பாக தகவல் தெரிந்த அனைவருக்கும் தங்களுடைய தகவலை நீதிமன்றத்துக்கோ பொலிஸாருக்கோ கொடுப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே, அத்தகவல் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு அதனடிப்படையில் சரியான முடிவுக்கு வருவதற்கு பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது

சைக்கிள் பாகங்களில் மறைத்து, இலங்கைக்கு கடத்தி வந்த ஒன்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான 775 கிராம் நிறையுடைய ஹசீஸ் ரக போதைப்பொருளைக் கைப்பற்றியதாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த போதைப்பொருளை, இலங்கைக்கு கொண்டுவந்த இந்தியர் ஒருவரையும் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ)



வவுனியா தோணிக்கல்லில் நெசவு கைத்தொழில் பயிற்சி நிலையம் நேற்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திரவினால் திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண தொழிற்றுறை திணைக்களம் வவுனியா மாவட்டத்தில் நேற்றையதினம் நான்காவது நெசவுத்தொழில் பயிற்சி நிலையைத்தையும் உற்பத்தியையும் ஆரம்பித்து வைத்தது. இதுவரை செட்டிகுளம், வேப்பங்குளம், அம்பலாங்கொட முதலான இடங்களில் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

## ஆற்றுக்குள் பாய்ந்தது வான்; பயணித்த மூவர் உயிரிழப்பு!

கண்டி - மாத்தளை பிரதான வீதியில் கட்டுகஸ்தோட்டையை அண்மித்த பிரதேசத்தில் நேற்று அதிகாலை வான் ஒன்று ஆற்றுக்குள் பாய்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

இவ் விபத்தில் மாவனெல்லை உயன்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் யூசுப், மொஹமட் பாரூக், பாத்திமா மிசிரியா ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு சென்று வீடு திரும்பும் வழியில் அதிகாலை 4 மணியளவில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். சாரதி உறக்கத்துக்குள்ளானதால் இவ்விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## மகிந்த ஆசியாவின் சிரேஷ்ட தலைவராம்

### அஸ்வர் எம்.பி. கூறுகிறார்



ஆசியாவில் மிகவும் சிரேஷ்ட தலைவராக கருதப்படும் ஜனாதிபதிக்கு முஸ்லிம் மக்கள் மத்தியில் உதவி குறையாது எனவும் அது தொடர்ந்தும் கிடைக்கும் எனவும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முஸ்லிம் மக்களின் அன்பை வென்றுள்ள ஜனாதிபதிக்கு அவரது தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு முஸ்லிம் ஆதரவு வழங்கி, அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி, பாலஸ்தீனத்திற்கு நிதியுதவி வழங்கியதை எதிர்க்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதில்லை என்று முஸ்லிம் மககள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்குள் முஸ்லிமகளின் சரியா சட்டத்தை விமர்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் கருத்துகளுக்கு எதிரான முனைப்புகளை இது வரை அந்த கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளவில்லை.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியின் மீது முஸ்லிம்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் எனவும் அஸ்வர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆட்சியினை அமுல்படுத்த வேண்டும்

## சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்து

(சென்னை)

சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறை தண்டனையும், ரூபா 100 கோடி அபராதமும் விதித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் கடந்த சனிக்கிழமை தீர்ப்பு வழங்கியது. இதைத் தொடர்ந்து, ஜெயலலிதா பெங்களூர் பரப்பன அக்ர ஹார மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பிணை கோரி அவரது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணை எதிர் வரும் 7ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தீர்ப்பை தொடர்ந்து தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றது.

இந்நிலையில் தமிழகத்தில் வன்முறை சம்பவங்கள் நடைபெறுவதை அடுத்து அங்கு மத்திய அரசு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரகளில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

ஜெயலலிதாவிற்கு தண்டனை விதிக்கப்பட்டதை தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் இழிவானது மற்றும் வெட்கக்கேடானது என்று சுப்பிரமணியன்சாமி கண்டனம் தெரிவித்துள்ளார். மோடி அரசு தமிழகத்தில் ஒரு வருடத்திற்கு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும். அதன் பின்னர் அங்கு மீண்டும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சுப்பிரமணியசாமி வலியுறுத்தியுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுபவர்கள் மற்றும் தேச விரோத சக்திகளை தேசிய பாதுகாப்பு சட்டத்தின்படி கைது செய்ய வேண்டும் என்றும் சுப்பிரமணியன் சுவாமி கேட்டுக் கொண்டுள்ளார். (இ)




## குப்பை அகற்றுபவர்களை பற்றிப் பேசாமல் குப்பைகளை பற்றி பேசுவது மோசடியானது

(சென்னை)

இந்தியாவை தூய்மையாக வைக்கவேண்டும் என்பதற்காக இந்திய பிரதமர் நரேந்திரமோடி நேற்று முன்தினம் தொடக்கி வைத்திருக்கும் "தூய் மையான இந்தியா" என்கிற நாடு தழுவிய பிரசார திட்டம் குப்பைகளைப்பற்றி மட்டும்பேசுகிறதே தவிர, காலம காலமாக குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் துப்புரவுத்தொழிலாளர்கள் பற்றி பேச மறுக்கிறது என்கிறார் ஆதித்தமிழர் பேரவை அமைப்பின் நிறுவுநர் இரா அதியமான்.

தமிழ்நாட்டில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களில் பெரும்பான்மையானவர்கள் அருந்ததியர்கள் என்று அரசு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த பின்னணியில் அருந்ததியர் அமைப்புக்களில் ஒன்றான ஆதித் தமிழர் பேரவை, மோடியின் இன்றைய தூய்மையான இந்தியாவுக்கான பிரசார திட்டத்தை ஒரு மோசடியாக பார்ப்பதாக குற்றம் சாட்டினார் அதியமான்.

**கையால் மலம் அள்ளுவது இன்றளவும் நீடிக்கிறது**

அதிகாரபூர்வமாக கையால் மலம் அள்ளும் பணி இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக இந்திய, தமிழக அரசுகள் கூறினாலும் இன்றளவும் கையால் மலம் அள்ளும் பணியில் இலட்சக்கணக்கான துப்புரவு தொழிலாளர்கள் தொடர்நதும் இதே அரசுகளால் ஈடுபடுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் எனறு கூறினார் அதியமான்.

தமிழ்நாட்டில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஐநது இலட்சம்பேருமே கையால் மலம் அள்ளும் பணியை செய்வதாகவே கருத வேண்டும் என்று வாதாடும் அதியமான், சென்னை உள்ளிட்ட நகரங்களில் கூட குடிசைப் பகுதிகளில் இன்றளவும் திறந்த வெளி கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் துப்புரவுப் பணியாளர்கள் மலத்தை தங்களின் கைகளாலேயே அகற்ற வேண்டிய நிலை நீடிப்பதாக தெரிவித்தார்.

இந்தியாவின் தூய்மைக்கு எல்லோரும் கைகொடுங்கள் என்கிறார் மோடி.

அதேபோல மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்திய ரயில்வே துறையில் சுமார் 42 இலட்சம் ஊழியர்கள் பணிபுரிவதாக தெரிவித்த அதியமான், இந்தியாவின் அனைத்து புகையிரத நிலையங்களில் நிற்கும் எல்லா புகையிரதங்களுமே இன் றளவும் பயணிகள் கழிக்கும் மலசலக்கழிவுகளை துப்புரவுப்பணியாளர்கள் தங்களின் கைகளாலேயே அகற்றுவதாக விளக்கினார். (இ)

## பொக்கிஷத்தை பரிசளித்தார்

### மோடி ஆச்சரியம்

அமெரிக்காவுக்கு 5 நாள் சுற்றுப்பயணமாக சென்றிருந்த பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி ஒபாமா ஒரு அரிய புத்தகத்தை பரிசளித்துள்ளார். இது பிரதமர் மோடியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அப்படி என்னதான் அந்த புத்தகத்தில் இருந்தது?

1893-ஆம்ஆண்டுவெளிவந்த "பார்லிமெண்ட் ஆப் வேர்ல்ட்ஸ் ரிலீஜன்ஸ்" என்ற புத்தகத்தில் சுவாமி விவேகானந்தர் எழுதிய கருததுக்கள் அடங்கிய செயதித் தாள்களும் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்த புததகத்தையே ஒபாமா மோடிக்கு பரிசளித்திருக்கிறார்.

இந்த பரிசை பார்த்தவுடன் ஆச்சர்யப்பட்டு போன பிரதமர் மோடி டுவிட்டரில் தனது வியப்பை பதிவு செய்துள்ளார். அதாவது ஒபாமா விலை மதிப்பில்லாத மிக உயர்ந்த அரிய பொக்கிஷத்தை எனக்கு பரிசாக அளித்திருக்கிறார். அது ஒரு அரிய புத்தகம் என்று தெரிவித்தார். அந்த புத்தகத்தின் சில படங்களையும் டுவிடடரில் வெளியிட்டிருக்கிறார் பிரதமர் மோடி. (இ)

## கொலை வழக்கில் சி.பி.சி.ஐ.டி விசாரணை

எழும்பூரில் உள்ள பிரபலமான அடுக்குமாடி குடியிருப்பில் பெண் டாக்டரான எம்மா கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக எழும்பூர் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

கொலை நடந்த அடுக்குமாடி குடியிருப்பு வசதி படைத்தவர்கள் வசிக்கும் குடியிருப்பாகும். பெரிய நிறுவனங்களை சேர்ந்தவர்கள் தங்கும் விடுதியாகவும் இக்குடியிருப்பு உள்ளது.

குடியிருப்பை சுற்றி கண்காணிப்பு கமராக்களும் அதிக எண்ணிக்கையில் பொருத்தப்பட்டுள்ளன. (இ)

## பாரதச் செய்தி

### ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த 4 பெண்கள் நீரில் மூழ்கிப்பலி

(சென்னை)

கள்ளக்குறிச்சி அருகே ஈரியூர் கிராமப்பகுதியில் உள்ள பருத்தி வயல்காட்டில் களை பறிக்க சென்ற வேளை குட்டையில் மூழ்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பெண்கள் பலியாகியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த 4 பேரும் பருத்தி வயல்காட்டில் களை பறித்து விட்டு பின்னர் மதியம் ஒரு மணியளவில் மயூரா ஆற்றில் துணி துவைத்துக் கொண்டிருந்த வேளைஆற்றின் கரையோரத்தில்விளையாடிக்கொண்டிருந்த சிறுமி மணலுக்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் தவறி விழுந்தாள். இதனைக் கண்ட அச்சிறுமியின் தாய் மகளை காப்பாற்ற குட்டையில் குதித்தார்.

இதில் தாய் மகள் இருவரும் தண்ணீரில் மூழ்கினார்கள்.

இதைத் தொடர்ந்து உடன் வந்த இருவரும் குட்டையில் விழுந்த இருவரையும் காப்பாற்ற முயற்சித்த வேளை அவர்களும் தவறுதலாக குட்டையில் மூழ்கினர். அலறலைக் கேட்டு கிராமமக்கள்ஓடிவந்து குட்டையில் மூழ்கிய 4 பேரையும் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

ஆனால் அவர்களை சடலமாகவே மீட்க முடிந்தது.

இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த பெரிய நாயகி (வயது-45), இவரது இரு மகள்கள் புஸ்பா (வயது-26), சாந்தி(வயது-16) புஸ்பாவின்மகள் பத்மாவதி (வயது2) ஆகியோரே உயிரிழந்தவர்க ளாவர்.

குட்டையில் மூழ்கி தாய் மகள்கள் பேர்த்தி ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பலியானதில் ஈரியூர் கிராமமே சோகத்தில் மூழ்கியுள்ளது. (இ)

## அமெரிக்காவின் தலைமையிலான சீன எதிர்ப்பு கூட்டணியில் ஒருபோதும் இந்தியா சேராதாம்

### சீன் அரசுப் பத்திரிகை



அமெரிக்கா தலைமையிலான சீன-எதிர்ப்புக் கூட்டணியில் இந்தியா சேர வாய்ப்பில்லை என்று சீன அரசுப் பத்திரிகையான பீப்பிள்ஸ் டெய்லி வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்திய-சீன நல்லுறவுக்கு மோடி தலைமையில் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டு அது உலகம் முழுதும் பெரும் வெற்றிப் பயணமாக பேசப்பட்டு வரும் நிலையில் சீன அரசு தினசரியில் இந்தக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

ஜப்பான், அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ்கொண்ட அமெரிக்க தலைமை சீன-எதிர்ப்புக் கூட்டணியில் இந்தியா சேராது என்பதற்கான 3 காரணங்களை அந்தக் கட்டுரை அலசியுள்ளது.

ஆசிய-பசுபிக் பகுதிகளில் அமெரிக்கா தனது இராணுவ பலத்தை அதிகரிக்க ஜப்பான், அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளை கூட்டணி சேர்த்துள்ளது. இது பெரும்பாலும் சீனாவுக்கு எதிரான போக்கே என்று கூறியுள்ள அந்தக் கட்டுரை, இந்தியா அணிசேரா நாடு என்ற பண்பாட்டில் வளர்ந்து வருவது. எனவே இந்தியா ஒரு போதும் சீன-எதிர்ப்பு அமெரிக்க வியூகத்தில் இணையாது என்று அறுதியிடுகிறது அந்தப் பத்திரிகைக் கட்டுரை.

இந்தியா பன்முக அயல் நாட்டுக் கொள்கையை அனுசரிப்பது, ஆகவே இந்தியா அமெரிக்காவுடனான உறவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறதோ அதே யளவு சீனாவுடனான உறவுகளுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கும்" என்று அந்தக கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கு இடையிலான 'தீர்க்கப்படாத எல்லைப் பிரச்சினைகள்' இருந்தாலும் இந்திய-சீன உறவுகள் பெரியளவில் பாதிக்கப்படாது என்கிறது அந்தக் கட்டுரை.

அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் ஜப்பான், அமெரிக்கா, நியூசிலாந்து, கனடா, பெரு, சிங்கப்பூர், வியட்நாம் ஆகிய நாடுகளின் கூட்டுறவுடன் அமைக்கப்பட்ட "டிரான்ஸ்-பசுபிக் கூட்டுறவு" சீனாவின் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்க மேற் கொள்ளப்பட்ட முயற்சியாகும். இந்தக் கூட்டணி அமைக்கப்படுவதில் இந்தியா பரிசீலிக்கப்படவில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணம் பெரும்பாலும் இந்திய பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டதே என்று அந்தக் கட்டுரை அறுதியிட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எதுவும் நிலைத்து நிற்பதில்லை இதை உணர்ந்தவன் மகிழ்ச்சியோ வருத்தமோ கொள்வதில்லை -சாயி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பகையை வளர்ப்பதற்காக எதிர்ப்பைக் காட்டக் கூடாது

குருசேத்திரப் போர் ஆயத்தமாக இருக்கும் நேரம். கௌரவர் சேனையை அருச்சுனன் பார்க்கிறான். பிதாமகர் எனப்படும் வீஷ்மர் போர்க்களத்தில் தளபதியாக நிற்கின்றார். அடுத்து தமது குரு துரோணாச்சாரியார்- இப்படியே போர்க்களம் முழுவதும் உறவுகளும் உற்றவர்களுமாகக் காணப்பட, தேரில் இருந்து இறங்கிய அருச்சுனன் வீஷ்மரை நோக்கிச் செல்கின்றான்.

போர்க்களத்தின் இரு தரப்பிலும் பேரதிர்ச்சி ஏற்படுகிறது. அருச்சுனன் பயந்து விட்டான் என்று வீஷ்மர், துரோணர் தவிர்ந்த கௌரவர் சேனை நினைக்கிறது.

ஆனால் வீஷ்மரிடம் சென்ற அருச்சுனன், போரிடுதற்கு அனுமதி தந்தருள்க! என்று கேட்கின்றான்.

அதற்கு மகனே! அருச்சுனா வெற்றி உனதாகுக! என்று ஆசி கூறுகின்றார் வீஷ்மர்.

குருசேத்திரத்திரப் போரில் பாண்டவர்களின் வெற்றிக்கான முதல் இராஜதந்திரம் இதுதான். பாண்டவர்கள் வெற்றி பெறவேண்டுமென கௌரவர் சேனைத்தளபதி ஆசி வழங்கினால், துரியோதனன் எங்ஙனம் வெல்ல முடியும்?

மாறாக போர்க்களத்தில் நின்று கொண்டு; தேரால் இறங்கி வீஷ்மரிடம் சென்றால், என்னை பலவீனனாக நினைப்பார்களே என்று அருச்சுனன் நினைத்திருந்தால் வெற்றிக் கனியை அவர்கள் பெற்றிருக்கமுடியாது.

ஆக, இராஜதந்திரம் என்பதும் பகைமை என்பதும் வேறுபட்டவை. இராஜதந்திரம் நமது இலக்கை அடைவதற்கானது. பகைமை எக்காலத்திலும் மன உளைச்சல் படுவதற்கானது.

இங்கு கௌரவர்களிடம் பகைமை இருந்தது. பாண்டவர்களிடம் தர்மத்தோடு கூடிய இராஜதந்திரம் இருந்தது. பகைமை வேரோடு அழித்தது. தர்மம் சேர்ந்த இராஜதந்திரம் வெற்றியைக் கொடுத்தது என்பதை குருசேத்திரப்போர் நமக்குக் கற்றுத் தருகிறது.

இரண்டாம் உலகப் போரில் நிர்மூலமாகிப் போன ஜப்பானிடம் பகைமை இருந்திருந்தால் அந்த நாடு இத்துணை அபிவிருத்தியை அடைந்திருக்க முடியாது. எனவே நிலைமைக்கு ஏற்ப தீர்மானங்களை எடுப்பது மிக மிக அவசியம்.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தனது பதவியேற்பின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு முன்பாகவே சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இது விக்னேஸ்வரனின் இராஜதந்திரம் மட்டுமன்றி சமாதான சூழலுக்கான நேசக் கரம் நீட்டும் செயலாகவும் கருதக் கூடியது.

எனினும் இலங்கை அரசு அவ்வாறு கருதியதாகத் தெரியவில்லை. அவ்வாறு கருதியிருந்தால், வடக்கின் முதல்வர் விடுத்த பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

இருந்தும் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரன் தூய்மையான எண்ணத்தோடு செயற்பட்டதை நீதி உணர்ந்த தென்பகுதி மக்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வர். இது நிச்சயம் தமிழ் மக்களுக்குச் சாதகமானதாகும்.

எனவே எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு வரும் போது அவர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் கலந்து கொண்டால் இன்னும் நல்லது.

வடபகுதி தமிழர்களின் தாயகம் என்பதை உணர்த்துவதற்கும் எங்கள் உரிமையை நிலை நிறுத்துவதற்கும் நாம் ஒரு போதும் பின்னடிக்கக் கூடாது. ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தில் வடக்கின் முதல்வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்து கொள்வது நமக்கு சாதகமாக இல்லாவிட்டாலும் ஒருபோதும் பாதகமாகாது. ஆகையால் ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தில் வட மாகாண அரசின் பிரசன்னம் அவசியம்.

# கரைச்சி பிரதேச சபையுடன் கண்டாவளை பிரதேசத்தை உள்ளடக்கி இருசபைகளாக செயற்படுத்த வேண்டும்

## மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி பிரதேச சபையினை நகர சபையாக உயர்த்தி கரைச்சி பிரதேச சபையுடன் தற்போது இணைத்து இயங்கி வரும் கண்டாவளை பிரதேசத்தை உள்ளடக்கி கண்டாவளை பிரதேச சபை, கரைச்சி பிரதேச சபை என இரு சபைகளாக செயற்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கடந்த 16.07.2014 இல் உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லாவுடன் உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைச்சி பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் ஆலோசிக்கப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி நகர சபை, கரைச்சி பிரதேச சபை, கண்டாவளை பிரதேச சபை என்ற மாற்றம் கொண்டு வரப்பட்ட வேண்டுமென கரைச்சிப் பிரதேச சபை தலைவரால் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கு அமைச்சர் முதலில் மறுப்புத் தெரிவித்த போதும் பின்னர் மீளவும் உள்ளூராட்சி ஆணையாளரும் இக் கோரிக்கையை வலியுறுத்தியதனால் அமைச்சர் சபையின் வருமானம் தொடர்பாக விசாரித்தார்.

இதற்கு வருமானம் போதிய அளவு உள்ளதாக தெரிவிக்கப்பட்டதுடன் முன்பு கிளிநொச்சி மையக்கிராமங்கள் வர்த்தமானி மூலம் அங்கீகாரம் பெற்று குறித்த நகரப் பகுதி பட்டனசபையாக இருந்தமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் நகரசபை எல்லை தொடர்பாக ஆராய்வதுடன் பரந்தன் நகரப்பகுதியை நகரசபைக்குள் உள்ளீர்த்தால் கண்டவாளை பிரதேச சபைக்கு வருமானம் குறைவடையலாம் எனினும் கிளிநொச்சி நகரசபைக்குள் பரந்தன் நகரத்தையும் இணக்காமல் தவிர்த்தல் பயனற்றதாகி விடும் எனவும் கருத்துக்கள் எழுப்பபட்டது.

இது தொடர்பாக தனியான சபை அமர்வு ஒன்றிணை ஒழுங்கமைத்து ஆலோசனை தெரிவிக்குமாறு கோரப்பட்டது.

இதனடிப்படையில் மாவட்டச் செயலர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், நகர அபிவிருத்திச் சபை பணிப்பாளர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. இதன்போது பொது மக்களின் கருத்துக்களை தெரியப்படுத்துமாறு மாவட்டச் செயலாளரால் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறிப்பிட்ட சபைகளின் ஒழுங்கமைப்பு செய்யப்படுதல் நல்லது எனவும் இதனால் பலவித நன்மைகள் ஏற்படுமெனவும் கிராம, நகர மக்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகிறன. (2-254)

## கால்நடைகளின் குடிநீர்த் தேவைக்காக இரண்டு குடிநீர்த் தொட்டிகள் அமைப்பு

கிளாலிப்பகுதியில் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காக 50 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு குடிநீர் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியில் அமைக்கப்படவுள்ள இந்த தொட்டிகளுக்கான நிர்மாண வேலை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கிளாலிப்பகுதியிலுள்ள 5 பட்டிகளை சேர்ந்த மாடுகள், மேய்ச்சல் தரைகளுக்கு செல்லும்போது குளங்களில் நீரின்மையால் குடிநீருக்காக பெரும் அவதிப்படுகின்றன.

மேலும் குடிநீருக்காக அலையும் மாடுகள் மிதிவெடி அபாயமுள்ள பகுதிகளுக்கு சென்று மிதிவெடிகளில் அகப்பட்டு அவயவங்களை இழத்தல் மற்றும் உயிரிழக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வந்தன.

இதனால், கால்நடைகளின் குடிநீர் பிரச்சினைக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளாலி பகுதி மக்கள் கோரிக்கைகள் முன்வைத்தனர். இதனையடுத்து, தற்போது குடிநீர் தொடட்டிகள் அமைக்கும்பணிகள்முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைப்பு வேலைகளை கிளாலி கமக்கார அமைப்பு மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(2-250)

## ஓமந்தை பொதுச்சந்தைக் கட்டடம் பயன்பாடின்றி கைவிடப்பட்டுள்ளது

வவுனியா, ஓமந்தை பொதுச் சந்தைக கட்டடம் பயன்படுத்தப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஓமந்தை பொதுச் சந்தைக் கட்டடம் நிகொட் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

ஆனால் அக்கட்டடத்தில் குறிப்பிட்ட சில மாதங்கள் மாத்திரமே சந்தை இயங்கிய நிலையில் கடந்த பல வருடங்களாக பயன்பாடின்றி கைவிடப்பட்டுள்ளது. இதனால், குறித்த கட்டடம் பாழடைந்து செல்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிககின்றனர்.

இதேவேளை ஓமந்தைப் பகுதியில் மீன வியாபாரிகள் தமது வியாபாரத்தை வீதியோரங்களிலேயே மேற்கொள்கின்றனர். இதனால் பயணிகளும் வியாபாரிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகினறனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், மக்களுக்காக அமைக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடம் பிரதேச சபையின் அக்கறையின்மை காரணமாக கடந்த பல வருட காலமாக பயன்படுத்தப்படாது உள்ளதாக அப்பகுதி மக்களால் குற்றஞ் சாட்டப்படுகினறது . இது தொடர்பில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் தெரிவிக்கையில், ஓமந்தைப் பொதுச் சந்தைக் கட்டடம் 2011 ஆம் ஆண்டு கேள்வி கோரப்பட்டு அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவருக்கு வழங்கினோம். ஆனால் அதனைப் பெற்றவர் தனக்கு நட்டம் எனக் கூறி இடைநடுவில் விட்டு விட்டார். அதன் பின் 2013 ஆம் ஆண்டு விவசாய திணைக்களமும் 2014 ஆம் ஆண்டு கமக்கார அமைப்பும் பெற்றுக் கொண்டது. ஆனால் அவர்களும் அதனை பயன்படுத்தவில்லை. இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம் என தெரிவித்தார். (2-250)

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றோம்

## அரசன்குள கிராம மக்கள் ஆதங்கம்

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அரசன்குள கிராம மக்கள் எந்தவொரு அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த இக் கிராமத்தில் சுமார் 70 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

வன்னியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த இக் கிராம மக்கள் 2009 ஆம் ஆண்டு தமது சொந்தப் பகுதியில் மீள்குடியேறிய போதும் வீட்டு வசதிகள் மற்றும் மலசலகூடங்கள் இன்றி மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்க்கையை நடத்தி வருவதாக தெரிவித்தனர்

தமக்கான வீட்டுத் திட்டத்தை பெற்றுத் தருமாறு பல அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அதேவேளை தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை தந்த அரசியல்வாதிகளும் இப்பக்கம் வருவதில்லை என குறித்த கிராம மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களாக தமக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த போதும் தற்போது ஏமாற்றம் தான் எஞ்சியுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தாம் மழையிலும் வெயிலிலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருவதாக குறிப்பிடும் அம்மக்கள், தமக்கான அடிப்படை வசதிகளை உடனடியாகச் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



உங்களுடைய பெற்றோர்கள் ஒரு விதமாக நடந்து கொள்கின்றனர். அது அவர்களுடைய முற்பிறவிகள், பிறந்த விதம்... மற்றும் பலவற்றின் மேல் ஆதாரப்பட்டுள்ளது. அதற்கு அவர்கள் பொறுப்பாளி அல்ல. அவர்களை எடைபோடுவதற்கு உங்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அவர்கள் எவ்வாறு உள்ளனரோ அவ்வாறே ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களிடம் அன்பாக இருத்தல் வேண்டும். அவர்களுக்கு சேவை செய்தல் வேண்டும் மற்றும் அவர்களை மதித்து நடத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் உங்கள் உறவுமுறை சீராக இருக்கும். எடை போடாத காரணத்தினால் உறவு முறை சீராகும். உறவுமுறைகள் சீரானதால் இருதயம் மலரும். உங்கள் இருதயத்திற்கும் பூமியின் இருதயத்திற்கும் மிக நெருங்கிய ஒற்றுமை உள்ளது. இவை இரண்டும் ஒரே லயத்தில் செயற்பட்டால் நல்ல உடல் ஆரோக்கியம் இருக்கும். உங்களுக்கு காரியங்கள் கைகூடும். அருள்வெள்ளம் பாயும். இளைஞர்கள் இதைத்தான் சாதிக்க வேண்டும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கேட்டு மகிழுங்கள்



- மனிதனுக்கு நல்லது, கெட்டதை பகுத்தறியும் திறனை கடவுள் கொடுத்துஇருக்கிறார்.
- யாரையும் வெறுப்பது கூடாது. அனைவரும் கடவுளின் பிள்ளைகளே.
- சேவையில் ஈடுபடும்போது, "நான் பிறருக்கு உதவி செய்கிறேன்" என்ற தற்பெருமையுடன் செயல்படுவது கூடாது.
- கடவுளின் பெருமையைக் கேட்டு மகிழவே நமக்கு காதுகளைக் கடவுள் வழங்கியிருக்கிறார்.
- கல்லிலே கடவுளைக் காண முயலவேண்டுமே தவிர, கடவுளைக் கல்லாக்கும் முயற்சியில் ஈடுபடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியிலான கோலூன்றிப் பாய்தல் மகாஜனா மாணவி சாதனை





(மானிப்பாய்)

கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப் பாணம் மகாஜனக் கல்லூரி மாணவி தேசிய சாதனைபடைத் துள்ளார்.

பாடசாலை மட்ட மெய்வல் லுநர் போட்டிகளில் மகளிருக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப் பாணம் மகாஜனக் கல்லூரியின் வீராங்கனையான ஜெகதீஸ்வரன் அனிதா தேசிய சாதனை படை த்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளை யாட்டரங்கில்நேற்று முன்தினம் ஆரம்பமான பாடசாலை மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் மகளி ருக்கான 19 வயதுக்குட்பட்ட பிரி விலேயே அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

போட்டியில் ஜெகதீஸ்வரன் அனிதா 3.32 மீற்றர் உயரத்துக்கு தாவினார்.

இதன்மூலம் 2012 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விழாவில் கோலூன்றிப் பாய்தலில் நிலை நாட்டப்பட்ட 3.30 மீற்றர் உயர தேசிய சாதனை முறியடிக்கப்பட்டது. அந்த சாதனையை கடற்படை வீராங்கனை அனோமா கருனா வன்ச நிலைநாட்டியிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாக கடந்த வருடங்களிலும் தேசிய மட்டப் போட்டிகளில் இவர் சாதனை படைத்து வருகின்றமை குறிப்பி டத்தக்கது

இவரின் பயிற்சிகளை சி .சுபா ஷ்கரன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-23)

# இன்றைய போட்டி



உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம்யாழ். லீக்கின் அனுசரணையுடன் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியை நடத்துகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு.

மாலை 4 மணிக்கு விக்னேஸ்வரா விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஆ. யூனியன் விளையாட்டுக்கழகமும் மாலை 5 மணிக்கு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# தேசிய ரீதியான தட்டெறிதல் மகாஜனா வீரனுக்கு வர்ண விருது



இடம்பெற்று வரும் பாடசாலை களுக்கிடையிலான தேசியமட்ட விளை யாட்டுப் போட்டியில் அகில இலங்கை ரீதியான வர்ண விருதொன்று தெல் லிப்பழை மகாஜனாக் கல்லூரி வீர னால் வெல்லப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றன.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வீரன் யு.சுவிசாந் இவ் வர்ண விருதை வென்றுள்ளார்.

17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தட்டெறிதல் நிகழ்விலேயே இவ் வர்ண விருது கிடைத்துள்ளது.

இப்போட்டி நிகழ்வில் 46.28 மீற்றர் தூரம் எறிந்து பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தட்டெறிதல் அகில இலங்கை ரீதியாக 4ஆம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## வடமாகாண விளையாட்டு

# நீளம் பாய்தலில் புதிய சாதனை



நீளம் பாய்தலில் புதிய சாதனை படைத்துள்ளார் கரவெட்டி பிரதே சத்தை சேர்ந்த சி.ஆரணி.

வடமாகாண விளையாட்டுதிணை க் களத்தினால் நடாத்தப்பட்ட மாவட் டங்களுக்கிடையிலான மாகாண மட்ட தடகள போட்டி அண்மையில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விளை யாட்டு கழக மைதானத்தில் நடை பெற்றது.

இதில் நீளம் பாய்தலில் பங்குப ற்றிய சி. ஆரணி முன்னைய சாத னையான 4.7 மீற்றரை முறிய டித்து 5.19 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை படைத்தார்.

இவர் மாவட்ட மட்ட போட்டியில் பழைய சாதனையான 5.05 மீற்றர் தூரத்தை முறியடித்து 5.08மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனை படை த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக



கொம்மாந்துறை இளைஞர் விளை யாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பா ணம் கிங் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை கம்பர்மலை வித்தியாலய மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் இச்சுற்றுப்போட்டி அணிக்கு 8 பேர் 8 ஓவர்கள் கொண்டதாக இடம்பெறும்.

இதில் கலந்து கொள்ள விரும் பும் விளையாட்டுக்கழகங்கள் 077 1973814 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளு மாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (க)

# தொடரிலிருந்து சர்மா விலகல்



இந்திய அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ரோகித் சர்மா காயம் காரணமாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான தொடரில் பங் கேற்கவில்லை.

இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில் விரல் மற்றும் தோள் பட்டையில் ரோகித் சர்மாவுக்கு காயம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர் அந்த தொடரில் இருந்து விலகினார்.

இதைத் தொடர்ந்து மும்பை அணியின் அணித்தலைவராக உள்ள அவரால் சம்பியன்ஸ் லீக் தொடரிலும் விளையாட முடிய வில்லை.இந்நிலையில் அவரது கை விரல் காயம் குணமடைந்து விட்டது. ஆனால் தோள்பட்டை காயம் குணமாக இன்னும் மூன்று வாரம் ஆகும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால் அவரால் ஒருநாள் தொடர் மற்றும் இருபது-20 போட் டியில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

5 போட்டிகள் அடங்கிய ஒரு நாள் தொடர் இம்மாதம் 8ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடக் கவுள்ளது. டெஸ்ட் போட்டி வரு கின்ற 30ஆம் திகதி தொடங்கவுள் ளது. (க)

# புதிய சாதனையில் கம்பீர்



இருபது- 20 போட்டிகளில் டோனிக்கு அடுத்து 100 போட்டி களில் அணித்தலைவராக இருந் தவர் என்ற சாதனையை படைத் துள்ளார் கொலகத்தா அணித் தலைவர் கம்பீர்.

தற்போது சம்பியன்ஸ் லீக் தொடரின் ஹோபர்ட் அணியுட னான அரையிறுதிப் போட்டியில், கம்பீர் 101ஆவது முறை அணித் தலைவராக விளையாடியுள்ளார்.

இவரது தலைமையிலான கொல் கத்தா அணி இதுவரை 13 முறை தொடர்ச்சியாக வெற்றி பெற்று அசத்தியுள்ளது. கவுதம் கம்பீர் தலைமையில் கொல்கத்தா அணி இதுவரை 76 போட்டிகளில் விளை யாடி 44 வெற்றி, 30 தோல்வி, 1 டிராவை சந்தித்துள்ளது.

அதே சமயம் ஐபிஎல் போட்டி யில் டில்லி டேர்டெவில்ஸ் அணிக காக அணித்தலைவராக களமிற ங்கிய இவர் 19 போட்டிகளில் விளையாடி 11 வெற்றி, 8 தோல்வி மற்றும் டில்லி அணிக்காக 5 போட்டியில் வெற்றி ஏதுமில்லாமல் அணித்தலைவராக இருந்துள் ளார்.

மொத்தம் 100 போட்டிகளில் அணித்தலைவராக இருந்த இவர் 60 போட்டிகளில் வெற்றி, 38 போட்டிகளில் தோல்வி, 1 போட் டியில் டிரா என பெற்றுக் கொடு த்துள்ளார்.

டோனி இதுவரை 107 போட் டிகளில் வெற்றி, 72 போட்டிகளில் தோல்வி, 2 போட்டிகளில் டிரா என 183 போட்டிகளில் விளையாடி முதலிடத்தில் இருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிமன்னே அதிரடி

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி தங்கம் வென்றது இலங்கை



ஆசிய விளையாட்டு போட்டியின் ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

17-வது ஆசிய விளையாட்டு போட்டியின் இருபது-20 கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இலங்கை- ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக தரங்க, சண்டிமால் களமிறங்கினர்.

தரங்க ஒரு ஓட்டங்களில் வெளியேற அணித்தலைவர் திரிமான்னே, சண்டிமாலுடன் ஜோடி சேர்ந்தார். அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய திரிமான்னே அரைசதம் கடந்தார். இவர் 37 பந்துகளில் 57 ஓட்டங் களை குவித்து ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடர்ந்து சண்டிமால் 33 ஓட்டங்களில் வெளியேறினார். 92 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் என்ற நிலையில் இலங்கை அணி இருக்கும் போது, களமிறங்கிய வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் 19.1 ஓவரில் இலங்கை அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்கள் குவித்தது.

பந்து வீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக முகமது நபி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியில் ஆரம்பம் முதலே விக்கெட்டுகள் சரிய தொடங்கின. 10 ஓட்டங்கள் இடைவெளியில் விக்கெட்டுகள் அடுத்தடுத்து விழுந்தன. இதனால் 17.4 ஓவரில் 65 ஓட்டங்களில் ஆப்கானிஸ்தான் அணி சுருண்டது. அந்த அணியில் அதிகபட்சமாக நஜீப் 17 ஓட்டங்கள் குவித்தார்.

இலங்கை தரப்பில், அதிகபட்சமாக மெண்டிஸ் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதன் மூலம் இலங்கை அணி 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இலங்கைக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. (க)




## நரைன் இன்று இல்லை



சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டியில் சென்னை அணியுடன் கொல்கத்தா இன்று மோதவுள்ள நிலையில், அந்த அணிக்கு புதிதாக ஒரு நெருக்கடி வந்துள்ளது.

கொல்கத்தா அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் விதி முறைக்கு புறம்பாக பந்து வீசுகிறார் என நடுவர்கள் 2வது முறையாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து அவர் சென்னை அணியுடனான இறுதிப்போட்டியில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன்னதாக டொல்பின்ஸ் அணியுடனான போட்டியில் இவரது பந்து வீச்சு குறித்து நடுவர்கள் புகார் தெரிவித்திருந்தனர்.

அவர் வீசிய நான்கு ஓவர்களில் மூன்று பந்துகளில் சந்தேகம் தெரிவித்தனர். ஆனால் ஹொபார்ட் ஹரிக்கேன்ஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் அரையிறுதி போட்டியில் அவர் வீசிய அனைத்து பந்துகளும் விதிமுறைகளை மீறியதாக நடுவர்கள் புகார் தெரிவித்தனர். இதனால் உடனடியாக தடை செய்யப்பட்டார்.

இந்த புகாரையடுத்து சென்னை ராமசந்திரா பல்கலைக்கழகத்திற்கு அவரை அனுப்ப கொல்கத்தா அணிக்கு அறிவுறுத்தப்படலாம். அங்கு அவரது பந்துவீச்சு சோதனை செய்யப்பட்டு அதை எவ்வாறு மாற்றலாம் என ஆலோசனைகள் வழங்கப்படும்.

கொல்கத்தா அணியின் முக்கிய பந்து வீச்சாளர் திடீரென தடை செய்யப்பட்டுள்ளது அந்த அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (க)

## இன்றைய போட்டி

(முல்லைத்தீவு)

நீராவிப்பிட்டி முள்ளியவளை அல் ஜின்னா விளையாட்டுக் கழகம் நடத்தும் பத்துப் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை மாலை டைமன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இப்போட்டியில் முல்லைத்தீவில் பதிவு செய்யப்பட்ட 15 கழகங்கள் பங்குகொள்கின்றன. இப்போட்டியின் கால் இறுதி யாட்டங்கள் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அரை இறுதியாட்டங்களும் இறுதியாட்டமும் 7-ம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது.(க)

## மீண்டும் அதிரடிக்கு தயாராகும் பிரைன் லாரா, ஜெயசூரிய





இலங்கை அணியின் சனத் ஜெயசூரிய, மேற்கிந்திய தீவுகள் அணியின் பிரைன் லாரா ஆகியோர் கட்டாரில் நடைபெறும் கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ளனர்.

கட்டார், டோஹாவில் உள்ள வெஸ்ட் எண்ட பார்க் கிரிக்கெட் அரங்கத்தில் முன்னாள் ஜாம்பவான்களான லாரா, ஜெயசூரிய ஆகியோரின் அணிகள் கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் ஒக்டோபர் 6-ம் திகதி மோதவுள்ளன.

**உலக லெவின் அணி:**

பிரைன் லாரா (அணித்தலைவர், மேற்கிந்திய தீவுகள்), பிரெண்டன் டெய்லர் (சிம்பாப்வே), ஹேர்ஷல் கிப்ஸ் (தென்னாபிரிக்கா), ரிக்கி வெசல்ஸ் (அவுஸ்திரேலியா), ஒவைஸ் ஷா (இங்கிலாந்து), டேமியன் மார்ட்டின் (அவுஸ்திரேலியா), கோரே கோலமோர் (மேற்கிந்திய தீவுகள்), சாமுவேல் பத்ரி (மேற்கிந்திய தீவுகள்), சாஜ் மஹ்மூத் (இங்கிலாந்து), ரியான் டென் டசாட்டே (நெதர்லாந்து).

**ஆசிய லெவின் அணி:**

சனத் ஜெயசூரிய (அணித்தலைவர், இலங்கை), தமிம் இக்பால் (பங்களாதேஷ்), இம்ரான் நசீர் (பாகிஸ்தான்), மாவன் அத்தப்பத்து (இலங்கை), ஆகாஷ் சோப்ரா (இந்தியா), ஏஞ்சலோ பெரேரா (இலங்கை), மஹேல ஜெயவர்த்தன (இலங்கை), அப்துல் ரசாக் (பாகிஸ்தான்), ரஷீத் லதீப் (பாகிஸ்தான்), [illegible] (பாகிஸ்தான்) [illegible] (க)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராசதுரை



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசதுரை நேற்று (03.10.2014) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.10.2014) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துளாய் பிள்ளையார் கோவில்,
அல்வாய் வட மேற்கு (திக்கம்)
அல்வாய்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி யாழ்.நல்லூரில் உண்ணாவிரத போராட்டம்

## விஜயகாந்த் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளினை விடுதலை செய்யக்கோரி தமிழ்த் தேசிய முற்போக்கு கட்சியினரால் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும் நேற்றிரவு பொலிஸாரால் விஜயகாந்த் உட்பட கட்சி உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ்.நல்லூர் முருகன் ஆலய பின் வீதியில் ஆரம்பமாகியது.

இவ் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்த் தேசிய முற்போக்கு கட்சியின் பொதுச் செயலாளர் சு.விஜயகாந்த் தலைமையில் ஆரம்பமானது.

இதில் பொதுமக்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளினை விடுதலை செய்யக்கோரி எமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும். தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யக்கோரி கடந்த செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி யாழ்.செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தி ஜனாதிபதிக்கு யாழ். மாவட்ட செயலாளர் ஊடாக மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்தோம். ஆனால் இந்த நிமிடம் வரை அதற்கான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் 12, 13 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் வருகை தரவிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும், எமது எதிர்ப்பைக் காட்டும் வகையிலும் இந்த உண்ணாவிரத போராட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

அத்துடன், உண்ணாவிரதப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி தொடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை 5.00 மணிவரை இரவு பகலாக மூன்று நாட்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முற்போக்கு தமிழத் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் உட்பட மூவர் நேற்றிரவு 7.00 மணியளவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

உண்ணாவிரத போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் இருந்த வீட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டிலேயே இந்த மூவரையும் தாம் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-4,11)

## இந்திய உயர்...

காரத்துக்கு மேலும் அப்பால் சென்று இருநாட்டு மீன்பிடித் தொழில் முறைமை தொடர்பான விவகாரமாக இதனை விரிவுபடுத்திக் கையாளத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இலங்கை கடற்றொழில் திணைக்கள இயக்குநர்நாயகம் நிமால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மீன்வளத்தை அடியோடு சூறையாடும் விதத்திலான கடல் படுக்கையில் மீனை வாரி அள்ளும் முறைமைக்குப் பதிலாக ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு மீனவரை வழிப்படுத்துவதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு ஓளவு தீர்வுகாண முடியும் என்ற கருத்து இலங்கைத் தரப்பினால் முன்வைக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இதேசமயம் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை எதிர் வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி இந்தியாவுடன் பாதுகாப்புத் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடவிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஜெனிவாவில்...

பொறுப்பை நடை முறைப்படுத்தும விதத்தில் தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த தனது அறிக்கையை இலங்கை அரசாங்கம் மேறபடி குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் மனிதவுரிமைகள் நிலைமை தொடர்பான தமது அவதானிப்புக்களை அரசசார்பற்ற நிறுவனாங்கள் பலவும் மேற்படி குழுவுக்கு சமர்ப்பித்துள்ளன.

இந்நிலையில் மேற்படி அறிக்கைகளை ஆராய்வதோடு, இலங்கையில் மனிதவுரிமைகளைப் பேணி, அதனை மேம்படுத்துவது குறித்து இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுடன் குறித்த சுயாதீனமான நிபுணர் குழு கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் அடுத்த வாரம் ஆராயப்படவுள்ள இலங்கையின் மனிதவுரிமை நிலைமை பற்றிய ஆராய்வு தொடர்பிலான தகவல்கள் உடனடியாக வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஆணைக்குழுவின் அமர்வு...

பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பொறிமுறை ஒன்றைக் கோரியிருந்தது.

ஆனால் பூநகரியில் இடம்பெற்ற அமர்வின் போது இலங்கை படைத தரப்பு புலனாய்வாளர்கள் எனக் கூறிக்கொண்டவர்கள் பிரசன்னமாகியிருந்ததுடன், சாட்சியமளித்தவர்களை புகைப்படம் எடுத்தனர்.

அத்துடன், இலங்கைப் படையினர் பலரை அமர்வு நடந்த இடத்துக்கு வெளியில் காணமுடிந்தது.

சாட்சியமளிக்க வருபவர்களை மிரட்டுவதற்கே இந்த தந்திரோபாயம் பின்பற்றப்பட்டதாக நாங்கள் கருதுகிறோம்.

இது கடந்த கால வன்முறைகள குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவித்தால் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தை மேலும் அதிகரிக்கும்.

இது ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வழங்கப்பட்ட சாட்சியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## பாப்பரசர்...

குறிப்பாக, இலங்கையிலுள்ள எல்லா மககளுடனும் வத்திக்கானுக்கு உள்ள தோழமை உணர்வின் அடையாளத்தை வெளிப்படுத்துவதாகவும், இலங்கையில் நீதியையும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக உழைப்பவர்களுக்கு உற்சாகத்தை அளிப்பதாகவும் பாப்பரசரின் விஜயம் அமையும் என்ற நம்பிக்கையும் இங்கு வெளிப்படுத்தப்பட்டதாக வத்திக்கான் வானொலி கூறியுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் செய்தியின்படி, தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ், வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ், வெளியுறவு அமைச்சின் கண்காணிப்புக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, எதிர்க்கட்சியின் தலைமைக் கொறடா ஜோன் அமரதுங்க ஆகியோரும் கதோலிக்கர்களான சில அமைச்சர்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த மூன்றுநாள் விஜயத்தில் கலந்துகொண்டுள்ளனர். (செ-11)

## பௌர்ணமி...

தின் இறுதிக் கட்டத்தை மாத்திரம் மாலை நேரத்தில் இலங்கையில் காணலாம் என்றும் வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலும் அவுஸ்திரேலியா, ஜப்பான், கொரியா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலும் இந்த சந்திர கிரகணத்தை முழுமையாக காணலாம் என்று வானியல் நிபுணர் அநுர சீ.பெரேரா தெரிவித்தார்.

இந்த சந்திரகிரகணம் காரணமாக, பௌர்ணமி தினத்தன்று இரவு சிவந்த நிலவைக் காணலாம் என்றும்.இதற்கு 'ரெட் மூன்' என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## ஜெயா வாழ்வு...

அதற்கு முன்னரே ஜெயலலிதாவின் வாழ்க்கை கதை ஐந்து மொழிகளில் படமாக உருவாகி வருகிறது.

இப்படத்துக்கு 'அம்மா' என்று தலைப்பு வைத்துள்ளனர்.

பைசல் சைஃப் இயக்கும் இப்படத்தில் ஜெயலலிதா கதாப்பாத்திரத்தில் ராகினி திவேதி நடிக்கிறார்.

கன்னடம், மலையாளப் படங்களில் நடித்தவர் ராகினி திவேதி. தமிழில் 'நிமிர்ந்து நில்' படத்தில் நடித்திருக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு 80% முடிவடைந்த நிலையில் இன்னும் 15 நாள் தான் ஸூட்டிங் உள்ளது.

இதை தொடர்ந்து ஜெயலலிதா சொததுக்குவிப்பு வழக்கில் சிறை சென்றதால், இதையும் படத்தின் இறுதிக் காட்சியில் சேர்க்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## பிரி.உயர்ஸ்தானிகர் விவ...

நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கலாநிதி கிரிஸ் நோனிஸ் மீது நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவவகார அமைச்சின் கண்காணிப்பு எம்.பியுமான வாஸ் குணவர்தன தாக்குதல் நடத்தியதாக அவர், முறையட்டுள்ளதுடன் தனது இராஜினாமா கடிதத்தையும் கையளித்திருந்தார்.

இதேவேளை, தங்கள் இருவரும் இடையில் வாக்குவாதம் இடம பெற்றதாக தனியார் தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ள சஜின் வாஸ் குணவர்தன எம்.பி. தான் பிரித்தானிய உயர்ஸ்தானிகரை தாக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## கச்சதீவை மீளப்...

னீர்செல்வம் கோரிக்கை விடுத்துளளார.

இது தொடர்பில் அவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து கச்சதீவை மீளப் பெற வேண்டும் என்று முன்னாள் முதலவர் ஜெயலலிதா வலியுறுத்தி வந்திருந்தார்.

எனினும் அவ்வாறு செய்ய முடியாது என்று மத்திய அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் புதிதாக பதவி ஏற்றுள்ள முதல்வர் மீணடும் அது குறித்த கோரிக்கையை விடுத்துள்ளார். (செ-11)

## இலங்கை...

ளது.இந்திய அரசாங்கத்தின்கீழ்இயங்கும்சர்வதேச ஐஆர்கொன் நிறுவனம் இந்த சேவையை நடத்தவுள்ளது.

இதேவேளை தலைமன்னாருக்கும் மடுவுக்கும் இடையிலான ரயில் பாதை புனரமைப்புக்கள் தற்போது நிறைவடைந்து கொண்டிருப்பதாக ஐஆர்கொன் நிறுவன முகாமையாளர் ஜெயசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் பாதை அமைக்கப்படுவதன்மூலம இலங்கை - இந்திய கப்பல் சேவையை ஆரம்பிக்க ஏதுவாக அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1983 ஆம்ஆண்டுக்கு முன்னர், தலைமன்னார் வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட ரயில் சேவையின் ஊடாக இலங்கை-இந்திய கப்பல்சேவையும் சுமுகமாக இடம்பெற்று வந்தமையை அவர்சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

S.L.A.S.,D.O

அரச ஊழியர்களுக்கான வகுப்பு
அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளலாம் (D.O)
லீவு நாள் காரணமாக திங்கள் 06.10.2014
அன்று காலை 9-12 மணி வரை நடைபெறும்.

(A.R) நிர்வாகவியல் சம்மந்தமான கற்கைநெறி

வகுப்பு நடைபெறும் இடம் :
N.C.A. கல்வி நிறுவனம்
1-ம் கட்டை, பருத்தித்துறை.
தொடர்பு – 0779 222 916

(C-8647)

Sylo Ice Cream



நம்பிக்கையுடன் சுவையுங்கள்...
ஷைலோ ஐஸ் கிறீம்
தற்போது வல்லிபுர ஆழ்வார் திருக்கோவிலில் எமது தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
"உங்கள் ஆரோக்கியமே எங்களின் மூலதனம்"
எமது நிறுவன தயாரிப்புக்கள் Ro Water Purification மற்றும் UV நீர் சுத்திகரிப்பு சாதனங்களுடன் நவீன Hygienic Pasteurized முறைப்படி எமது வாடிக்கையாளர்களின் ஆரோக்கியத்தில் முழுக்கவனத்துடன் தயாரிக்கப்படுகின்றது. சீரான தரப்பரிசோதனைகள் மூலம் தரம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே எமது வாடிக்கையாளர்களைச் சென்றடைகின்றது. எமது முன்னேற்றம் வாடிக்கையாளர்களின்ஆரோக்கியத்தில் தங்கியுள்ளது என்பதை நாம் முழுமையாக உணர்ந்துள்ளோம்.
SYLO FOOD & BAVAREGES (PVT) LTD.
NO.76, AMMAN STREET, KOKUVIL EAST, JAFFNA.
021 4926003
075 9798053

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.